
பொன்னி



பொன்னி

ஆசிரியர்:-
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

மலர் 2 : : திருவள்ளுவர் ஆண்டு 1979 : : விலை அணு

இதழ் 4 : : வைகாசித்திங்கள் 2-ம் நாள் : : 15—5—

செய்திப் பாட்டு

திராவிடத்தின் திருநாள்

சீர்தூத்துக் குடிநகரில் திராவிடத்தின்
    சிங்கங்கள் எலாம்வந்து சேர்க வென்றே
ஓர்அறிக்கை எனையழைக்க உள்ளம் என்னும்
    ஒருபறவை சிறகடித்துப் பறக்கக் கண்டேன்!
நேர்மையுளச் சிதம்பரனார் கப்பல் விட்ட
    நினைவெல்லாம் அலையலையாய் எழுதல் கண்டேன்!
சேர்ந்துவிட்டேன் நல்தூத்துக் குடிக்குவந்து
    சேர்ந்தமக்கள் வெள்ளத்தில் துளியொன் றானேன்!

திராவிடத்தார் இழிவெல்லாம் நீங்கப் பெற்றுத்
    திருநாளாய்க் கொண்டாடும் காட்சி தானோ?
இராதபடி ஆரியமும் ஒழிந்த தாலோ
    இத்தனை ஆர்ப் பாட்டங்கள்! எனவியக்கத்
திராவிடர்கள் கூடிவிட்டார்! இனிமேல் இங்குத்
    திராவிடருக் கெதிராகப் புல்லுப் பூண்டும்
இராதினிமேல் என்பதிலே அட்டி ஏதும்
    இனியில்லை திராவிடர்கள் ஒன்றாய் விட்டோம்!

கடல்போல மக்களெல்லாம் கூடக் கண்டு
    களிப்படைந்தார் யாவரினும் மிகுதியாக
அடலேறு போல்நெஞ்சு வாய்ந்தார்! எங்கள்
    அரும்பெரியார் ஈரோட்டுத் தாத்தா; கொண்ட
உடல்துயரும் மறந்தின்பம் உற்றார் என்றால்,
    உண்மையிலே திராவிடத்தார் உரிமை எல்லாம்
அடைவதற்குத் தக்கதான நிலையடைந்தார்!
    அதுதானே பொருளாகும்? நினைவிற் கொள்வீர்!

—நாரா நாச்சியப்பன்

வெற்றிப் பாதையில் பெரியார் பெரும்படை

> "வெற்றி கண்ணுக்குத் தெரிகிறது. அது கானல் நீரல்ல. கருத்தும் கவலையும் இருந்தால் கண்டிப்பாக அடைந்தே தீருவோம் என்கிற உறுதி எனக்கு உண்டு"

அண்மையில் தூத்துக்குடியில் சிறப்பாக நடந்தேறிய 18-வது திராவிடர் கழக மாகாண மாநாட்டில் தலைமை தாங்கிய நம் பெரியார் மேற்கண்டவாறு தம் தலைமையுரையின் முடிவில் குறிப்பிட்டுள்ளார். ஆம். பெரியார் பெரும்படை, சுயமரியாதை இயக்கம், திராவிடக் கழகம் வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அதில் யாரும் ஐயப்பாடு கொள்ளவேண்டியதில்லை; அதற்குச் சான்று பகர்கிறது தூத்துக்குடி மாநாடு.

1945ல் நடைபெற்ற திருச்சி மாகாண மாநாட்டுக்குப்பிறகு ஏறக்குறைய ஆயிரம் நாட்கள் கழித்து இயக்கத்தந்தை பெரியார் அவர்களின் தலைமையிலேயே தூத்துக்குடியில் மாநாடு இதுவரை யாரும் நடத்தியிராத முறையில், கண்டிராத வகையில் திராவிடம் பூரிப்படையவும் ஆரியம் பயந்து நடுங்கவுமான முறையில் நடந்திருக்கிறது. ஒன்றரை லட்சம் மக்கள் கூடியும் ஒரு சிறிதும் குழப்பமோ காலாடித்தனமோ இல்லாமல் அமைதியாக முடிந்திருப்பது கழக வளர்ச்சியில், கட்டுப்பாடும் இணைந்திருப்பதையே காட்டுகிறது.

திராவிடக் கழக உறுப்பினர்கள் என்று கூறப்படுவோர் தொகை அரை லட்சத்திற்கு மேலாகவும், அதன்பால் அனுதாபமுள்ளவர்களாகக் கருதப்படுபவர்கள் பல லட்சம் பேர்களாகவும், தமிழ் நாடெங்கும் 500 கிளைக் கழகங்களாகவும் கட்சியின் வளர்ச்சி இருந்து வருகிறது. திராவிடக் கழக மனப்பான்மை எல்லாக் கட்சிகளிலும் பரவியிருப்பதோடு எல்லாத் துறைகளிலும் கலந்து ஒருமைப்பட்டு இருப்பதே பெருவெற்றியென்று கூறலாம். கழகக் கொள்கைகளை ஆதரிப்பவை

என்று கூறும் பத்திரிகைகளே நாற்பதுக்குமேல் இப்பொழுது நடைபெற்று வருவதும் நல்ல அறிகுறியாகும். ஆளுகின்ற காங்கிரஸ்காரர்களிடையேயும் நம் எண்ணம், இன உணர்வு தோன்றியிருப்பதும் அப்போக்கிலேயே காரியங்கள் நடைபெறுவதும் நாம் மகிழ்வதற்குரியன.

இத்தகைய சூழ்நிலையில் தூத்துக்குடி மாநாடு வெற்றிகரமாய் முடிந்திருப்பதில் வியப்பேதுமில்லை. ரயில்வேத் தொல்லை ஒன்றைத்தவிர, மற்றவர்கள் உதவாவிட்டாலும் இடையூறாவது செய்யாமலிருந்தது போற்றத் தக்கதே!

திராவிடர் கழகம் பிரசார இயக்கமே ஒழிய அது ஒரு அரசியல் கட்சியல்லவென்றும், சட்ட சபைக்குப் போவதோ, பதவிப் போட்டியோ தேவையற்றதென்றும் பெரியார் கூறியிருப்பது கட்சியின் நேர்மையான போக்கை விளக்கப் போதுமான ஆதாரமாகும். புல்லுருவிகளும், ஐந்தாம் படைக்காரர்களும், பதவிப் பித்தர்களும் சேலத்திற்குப் பின்னும் சிறிது அண்டியிருந்தவர்கள் இந்த விளக்கம் பெற்ற பிறகு கட்சியை விட்டு வெளியேற வேண்டியவர்களாகிறார்கள்; அல்லது தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாகிறார்கள். "திருந்திய சமுதாயத்தைக் காண்பது, இழிவு நீக்கப் பணி புரிவது, நம் முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பவைகளைத் தகர்த்தெறிவது- இவையே நம்கட்சியின் லட்சியங்கள். இவற்றைப் பிரசாரம் செய்ய வேண்டும். நம் மக்கள் அனைவரையும் நம் பக்கம் திருத்தியாக வேண்டும். இனியும் நாம் சூத்திரர்களாக வாழமாட்டோம்" என்று பெரியார் சாதிமத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் பெரும்பணியில் அனைவரும் தலைப்பட வேண்டுமென்று பேசியிருப்பது குறிப்பிடத் தக்கது. மதசம்பந்தமற்ற அரசினை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பண்டித நேரு செவியில் இந்த அறிவுரை ஒலிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அடுத்து பலாத்காரம் கூடாது என்று பெரியார் அவர்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்தியிருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம். "திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவன் அடிபட்டான் என்றிருக்க வேண்டுமேயொழிய, அடித்தான் என்றிருக்கக் கூடாது" என்று அவர்தம் தலைமையுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை அரசினர் நன்கு கவனிக்கவேண்டும். பெரியாரோ, திராவிடக் கழகத்தாரோ, கிளர்ச்சிக்காகக் கிளர்ச்சி செய்பவர்களல்ல, காலாடிகளல்ல, பிரசாரம் மூலம் தங்கள் காரியத்தைச் சாதிப்பவர்கள்; அப்பொழுதும் இயலாமற் போனால்தான் போராட்டம் தொடங்குவார்கள் என்பதனை அரசாங்கம் உணர வேண்டும். உணர்ந்து பெரியாரின் நேர்மையான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பார்ப்பனர் மாநாடு கூடினார்கள். புல்லேந்தும் கையில் வாளேந்துவோம் என்று வீறாப்புப் பேசினார்கள். ஜாதிப்

படைபடை மாற்ற முடியாது; அதை மாற்ற முயல்வது ஆணைப்பெண்ணாக்குவதற்கு ஒப்பாகும். நாங்கள் உயர்ந்த சாதி தான் என்று கொக்கரித்தார்கள். இது ஒருவாரத்திற்கு முன்பு சென்னையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளே போதும் பெரியார் அவர்கள் போராட்டம் தொடங்க. ஆனால் ஆத்திரப்படவில்லை பெரியார். வீணாக வம்புக்கு வராதீர்கள் என்று அவர்களை எச்சரித்தார். 'நீங்கள் வாளேந்தினால் உங்களுக்குத்தான் கேடு; நாங்கள் வாளேந்தினாலும் உங்களுக்குத்தான கேடு. நாங்கள் முள் செடி. நீங்கள் வாழை இலே' என்று பார்ப்பனர்களுக்கு விளக்கம் கூறிப்புத்திசாலித்தனமாகப் பிழைத்துக் கொள்ளுங்கள் என்று யோசனை கூறினார். திராவிடர்களையோ "பொறுமையாயிருங்கள்" என்று வேண்டிக்கொண்டார். விரல் விட்டு எண்ணக் கூடிய தொகையினர் கொக்கரிக்கின்றனர். கடல் போன்ற மக்கள் கூட்டம் அமைதியாயிருக்கிறது. இதனைத் தூத்துக்குடியிலும் மைலாப்பூரிலும் கண்டோம். பார்ப்பனர்கள் 'தாங்கள் புத்திசாலிகள்' என்று சொல்லிக் கொள்வதில் தங்கட்கே நம்பிக்கை யிருக்குமானால் மலையை மோதும் வீணான, அழிவு வேலையை மேற்கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கிறோம். தூத்துக்குடியில் விழிப்புற்ற திராவிடம் இந்த வேண்டுகோளை விடுக்கிறது. வேண்டுகோள் எச்சரிக்கையாகும்; எச்சரிக்கை அபாய அறிவிப்பு ஆகும்; முடிவில் வினர்கள் அழிவு விளைவாக முடியும். அதனை யாரும் தடுக்க முடியாது.

இனித் தூத்துக்குடியில் நிறைவேறிய முக்கிய தீர்மானங்களைப்பற்றி எழுதுவோம். திராவிட நாட்டுப் பிரிவினைதான் எங்கள் முடிவான கோரிக்கை; அதில் எதும் மாற்றம் இல்லை யென்றும், இப்பொழுது வகுக்கப்பட்டுள்ள அரசியல் திட்டம் நம்மைக் கட்டுப்படுத்தாதென்றும் இரண்டு முக்கிய தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன. அரசியல் நிர்ணய மன்றத்திலே நம்முடைய பிரதிநிதிகள் இல்லை; அது யாரோ சிலர் செய்யும் கேலிக்கூத்து என்பதற்கு மேல் இந்தியாவில் இப்பொழுது அமுலுக்கு வரவிருக்கும் அரசியல் திட்டத்திற்கு விளக்கம் வேண்டியதில்லை. அத்திட்டம் நம்மைக் கட்டுப்படுத்தாது. அது நிறைவேறும் முன்பே திராவிடத்தின் சார்பாக இக் கருத்தினை நாம் தூத்துக்குடியில் அறிவித்து விட்டோம். இனித் திராவிட நாடு பிரிவது நம் கழக வளர்ச்சியையும் திராவிடர் எழுச்சியையும் பொறுத்திருக்கிறது; அது நிறைவேறிய உண்மை என்பதைக் காணும் நாள் விரைவில் வருமென்பதில் யாரும் ஐயப்படவேண்டியதில்லை. அடுத்த முக்கிய தீர்மானம் இந்தி மொழியை எதிர்த்து நிறைவேறியுள்ள தீர்மானமாகும். இந்திமொழி திராவிட நாட்டில் எந்த அளவிலும் உபயோகப்படுத்தக்கூடாதென்று அத்தீர்மானம் கூறுகிறது. இந்தியை நுழைப்பதற்காகச் சுற்றிவளைத்துப் புதுவழி கண்டு பிடித்துள்ளனர் அரசாங்கத்தார். மூன்றாவது மொழியென்று ஒன்று ஏற்படுத்தி அந்த மொழிகளினுள்ளே ஹிந்தியையும் ஒன்றாக வைத்து, ஆலோசனை கூறும் முறையிலே ஹிந்தியையே அனைவரும் படிக்க வேண்டுமென்றும் அரசாங்கத்தார் கூறி

யிருக்கிறார்கள். இந்த ஏற்பாடுகளெல்லாம் வலிய வம்புக்கிழுப்பவையாகும். சர்க்கார் தங்கள் முடிவை மீண்டும் ஆலோசனை செய்து கைவிட்டு விடுவார்களென்று நம்புகிறோம். இல்லையேல் திராவிடக்கழகம் இந்தியை எதிர்ப்பதில் வேறு எக் கட்சிக்கும் பின்வாங்காது என்பது மட்டும் திண்ணம். அதை யொட்டிக் கல்லூரிகளிலும் தொழிற் கல்லூரிகளிலும் தமிழிலேயே போதனா முறை இருக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருப்பதும் மற்றொரு முக்கிய தீர்மானமாகும்.

அடுத்தபடியாக ஆந்திர, கேரள, கன்னடியப் பிரதேசங்களில் பிரசாரம் துவககுவதை அடுத்த முக்கிய திட்டமாகக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானமாகும் நம் கொள்கை, வலுப்பெறாமலும், எதிரிகள் குறை கூறும்படியும் இருப்பதனை, இத்தீர்மானம் நிறைவேறுவதன் மூலம் மாற்றிவிடலாம். சாதிகள் இருக்கும் வரை சாதிப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டுமென்றும், ஜஸ்டிஸ் கட்சி வேலைத் திட்டத்தைத் தற்கால நிலைக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டுமென்றும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. இன்னும் மற்ற முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு தென்னாட்டு அரசியல் வாழ்விலேயே முக்கிய நிகழ்ச்சியாகப் பொறிக்கப்படும் முறையிலே தூத்துக்குடி மாநாடு நிகழ்ந்திருக்கிறது. மக்கள் வாழ்வை வளமாக்கும் திட்டங்கள் பல அங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. திராவிட நாட்டினை, திராவிட இனத்தைப் பெரியார் வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் அரும்பணியோடு, தூத்துக்குடி மாநாட்டில் தலைமை தாங்கும் பொறுப்பும் ஏற்றுப் பல அறிவுரைகளை மக்களுக்கும் ஆளுவோருக்கும் வழங்கியிருக்கிறார்!

ஆம், வெற்றி கண்ணுக்குத் தெரிகிறது. பெரியாரும் திராவிட இயக்கமும் பட்ட பெரும்பாடு, முப்பது ஆண்டுகளாகச் செய்து வந்த பிரசாரம் வீண் போகவில்லை; பலன் தரும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது! திராவிடம் விழிப்புற்று விட்டது; இப்பொழுது வெற்றிப்பாதையில் சென்றுகொண்டிருக்கிறது!



எழுந்தது திராவிடம்!

'வருக வருக' என்றழைத்தனர் தூத்துக்குடி மாநாட்டு வரவேற்புக் குழுவினர். "தமிழகத்தின் தென்கோடியிலே மாநாடு கூடுகிறதே - பெருந்தொலையன்றோ! நாம் எவ்வாறு செல்வது?" என்று தயங்கிய மக்களையெல்லாம் தொலையையும் மறந்து பயணம் தொடங்கும்படி செய்தது மாநாட்டினர் விடுத்த அழைப்பு.

தமிழகத்தின் மூலைமுடுக்குகளினின்றும், இலங்கை, சித்தூர், திருவாங்கூர், மைசூர் ஆகிய மற்றபகுதிகளினின்றும் புறப்பட்ட மக்கள் கிடைத்த கிடைத்த வசதிகளைக்கொண்டு தூத்துக்குடி வந்தடைந்தனர். வழி நெடுகத் திராவிட மணம் பரவி வந்தது. 'பெரியார் வாழ்க!' என்ற பேரொலி இடையறாது முழங்கிற்று! 'வடிவேல் முருகா வா' என்று பாடும் ரயில் பிச்சைக்காரனும் 'பெரியார் ராமசாமியின் பெரும்புகழ் கேளீர்' என்ற கீதமிசைக்கலானான்!

தூத்துக்குடிக்கு மக்கள் வரக்கூடாதென்று முன்கூட்டியே திட்டமிட்டனர் ரயில்வே அதிகாரிகள் என்றெண்ணுமாறு 'ரயில் வசதிகள்' அமைந்தன. தனி ரயில் ஏற்பாடுதான் இல்லை; கூட்டத்தைக் கண்டாவது பெட்டிகளைக் கூட்டினரா என்றால் அதுவும் இல்லை. டிக்கட் வழங்க வசதிகளைக் கூட்டவும் இல்லை. இவ்வாறு தடை பல செய்தும் திராவிடங்காண விழைந்த தோழர்கள் அஞ்சவில்லை. அறுபதுபேர் கொள்ளும் பெட்டியிலே இருநூறு பேராய் ஏறிக்கொண்டனர். இடம் கிடையாது தவித்து வெளியே தடுமாறும் தோழமை

யும் கைப்பிடித்து அழைத்துத் தம் மடியிலேனும் அமர்த்திச் சென்ற காட்சியை என்றும் மறக்க முடியாது. முன்பின் தெரியாத, எங்கெங்கோ பிறந்து வளர்ந்த தோழர்கள் ஒரே கொள்கை என்னும் பொதுக்கயிற்றில் பிணைக்கப்பட்டு ஒரு பெருங் குடும்பமாய்க் காட்சியளித்ததைத் தூத்துக்குடி நோக்கிச்சென்ற ரயில்களில்தான் காணமுடிந்தது!

தூத்துக்குடி வந்துசேர்ந்தோம்; ஒன்றரை லட்சம மக்களும் எப்படி யெப்படியோ மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தார்கள். ரயிலடியில் மாநாட்டுத் தொண்டர்கள் நல்கிய வரவேற்பும், அளித்த உதவியும், வேண்டியவர்களுக்கு வேண்டியதை ஈந்த தண்ணளியும், தட்டுத்தடுமாறாமல், வந்த அனைவரும் உரிய இடங்களில் சேரவழி காட்டிய பெருமாண்பும் மறக்க முடியாதவை! தொண்டர்களென்றால் தூத்துக்குடியை நினைக்கும்படியாக அவர்கள் நடந்துகொண்டார்கள் என்றால் அது மிகையல்ல. எழுபத்தையாயிரம் சதுர அடிகொண்ட மாநாட்டுப் பந்தலையும், 2 ஏக்கர் பரப்புள்ள சாப்பிடும் இடத்தையும் இத்தொண்டர்களே நிர்மாணித்தார்களென்றால் அவர்களின் பெருமையை எல்லையிட்டுக்கூற அது ஒன்றே போதும்! உடை வேண்டுமானால் மாற்றிக்கொண்டு தொண்டர்போல் உடுத்திக் கொள்ளலாம்; உடனே மிடுக்கு நடையும் இயல்பாக வரும். ஆனால் தொண்டுள்ளம் என்பது சில நாள் பயிற்சியிலே அமைந்துவிடாது. இந்த உண்மையை நோக்கும்போது தூத்துக்குடித் தொண்டர்கள் நமது வியப்புக்குரியவர்களாகிறார்கள். எண்ணும்போது முன்னிற்பார்கள்; 'என்ன வேண்டும் கூறுவீர்?' என்பார்கள்; 'இதனைச் செய்வீர்' என்னு முனனே, 'முடித்தோம்' என்று தோள் தட்டுவார்கள். 'வெட்டிவா என்றுரைத்தால் கட்டிவரும் வீரர் அவர்' என்ற புரட்சிக் கவிஞர் வாக்குக்கு இத்தொண்டர்களே இலக்கு! இருபத்தையாயிரம் பெண்கள் குழந்தைகள், ஒரு லட்சம் ஆண்கள் இவர்கள் அமைதியாக ஒரு சிறிதும் குழப்பமின்றி மூன்று, நான்கு நாட்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினரென்றால் அப்பெருமை முற்றும் இத்தொண்டர்களையே சாரும்! இத்தகைய தொண்டர்கள் நாளும் நாளும் பெருக என்பதனையே அவர்கட்கு வாழ்த்தாகக் கூறுகிறோம்!

2

1948 மே, 8 சனிக்கிழமை. காலை 4 மணிக்கே தூத்துக்குடியில் ஒரே பரபரப்பு. ஒன்றரைலட்சம்மக்களும்குளித்துச் சிற்றுண்டி சாப்பிட்டு 9-மணிக்கெல்லாம் ஊர்வலத்துக்குத் தயாராகி விட்டனர். 10 மணிக்கு ஊர்வலம் தொடங்கிற்று. இருளடைந்திருக்கும் திராவிடத்தைப் பளிச்சென எடுத்துக்காட்டும் பாங்கில் எங்கும் ஒரே கருப்பு மயம்-தூத்துக்குடியைச் சூழ்ந்து நின்றது. அரை லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். சைக்கிள் வீரர்களும் குதிரை வீரர்களும் முன்வரத் தலைவர் பெரியார் காரில் அமர்ந்துவர, ஊர்வலம் பெரு



முழக்கத்திடையே தூத்துக்குடி நகரவீதிகளின்வழியாக வெற்றியேந்தி வந்தது. தூத்துக்குடி வாசிகள்வியந்தனர். எதிரிகளோ பயந்தனர். 'திராவிடத்திற்கு வெற்றிநாள் இதே' என்று கூவினர் எக்காளத்தோடு தோழர்கள். வளைவுகளும் வரவேற்புகளும் பாடல்களும் அதற்குச் சித்திர விளக்கங்களும் தோரணங்களும்கறுப்புக்கொடிகளும் ஊர்வலத்தை இட்டுச் சென்றன. ஊர்வலம் 11-30மணிக்குப் பந்தலைவந்தடைந்தது. வெற்றி கண்ட மக்களின் சிரிப்பென அதிர்வெடிஎழும்பிற்று. பந்தல், வந்துள்ள திரளான மக்களைத் தாங்க இயலாது தடுமாறிற்று. பந்தலுள்ளும் வெளியிலும் மக்கள் சூழ்ந்து நின்றனர்.

கூடியிருந்த மக்கட் கடலிடையே பெரியார் காட்சி தந்தார்; வாழ்த்தொலி கடலலைபோல் எழுந்து எழுந்து ஓய்ந்தது.

செயலாளர் கே. வி. கே. சாமி அனைவரையும் வரவேற்றார். கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம்கொடியேற்றுவிழாசொற்பொழிவாற்றிக் கொடியேற்றி வைத்தார். கழகக் கருங்கொடி விண்ணிடைநிமிர்ந்துபறந்தது.

நமது அருமைத் தலைவர் வேதாசலம் அவர்கள் அரிய பல உண்மைகளைக் கூறி மாநாட்டினைத் திறந்து வைத்தார். சிறிய நாடுகளில் தான் ஜனநாயகம் வெற்றியடையுமென்றும், ஸ்வீடன் இவ்வகையில் சிறந்திருக்கிறதென்றும், திராவிட நாட்டுப் பிரிவினையில் உள்ள அரசியல் உண்மை இதுதானென்றும் அவர் குறிப்பிட்டார். வரவேற்புக்குழுத்தலைவர்கள் நீதிமாணிக்கம்,வள்ளிமுத்து ஆகிய இருவரும் வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். இவ்வாறு காலை நிகழ்ச்சி 12-30 மணிக்கு முடிவுற்றது.

3

சாப்பாட்டு ஏற்பாடுகளைப்பற்றிப் பெரும்பகுதிஎழுதாவிட்டால் மாநாட்டு வர்ணனை பூர்த்தியாகாது. நான்காயிரம் பேர் ஒரே சமயத்தில சாப்பிடுவதற்கேற்ற இடம்; சமைக்கவும் பரிமாறவும் இருநூற்றைம்பது தோழர்கள். இரண்டு மூன்று மணி நேரத்தில் லட்சம் மக்களும் சாப்பிட்டு முடித்து மறு நிகழ்ச்சிகளைக் காணக் கூடிவிடும் வகையில் ஏற்பாடு. இந்த ஏற்பாடுகள் அனைவரையும் வியக்கும்படி செய்தன. பம்

பரம மாதிரிச் சுழலும் சமையல் தோழர்கள், தொண்டர்களைத் தோற்கடிக்கும் விதத்திலே சுறுசுறுப்பைக் காட்டினர். இத்தனை பேருக்கும் 'சாப்பாடு' என்று, பேருக்குத்தான் போட முடியும் என்று பலரும் எண்ணுவது இயற்கை. ஆனால் முதல் தரமான சாப்பாடு (நல்ல அரிசியில்சமைத்தது) சாம்பார், ரசம், பாயசம், மோர், உருளைக்கிழங்கு கறிவகைகளோடு தயாரித்து யாரும குறைசொல்லாத வகையில் பரிமாறப்பட்டதென்றால் நேரில் சென்று உண்டவர்களைத் தவிர யாரும் நம்பமுடியாதது தான்! காலையில் அனைவருக்கும் ரவா உப்புமாவும சாம்பாரும் காபியும என்றவுடனே நம அதிசயம் கூடுகிறதே ஒழிய குறையவில்லை. இந்த அதிசயத்தைக் காரிய சாத்தியமாக்கிய தோழர் வி. வி. தனுஷ்கோடி நாடார் அவர்களை (சாப்பாட்டுத்) தோழர்கள் மறக்கவே முடியாது. மாநாடு முடிந்தது. மறு நாளும் தங்கும்படி நேர்ந்துவிட்டது ரயில் வேலை நிறுத்தங் காரணமாக! என் செய்வது என்று திகைத்தனர் அனைவரும். வரவேற்புக் குழுவினர் அஞ்சவில்லை. 'சாப்பாடு உண்டு; கவலை விடுக்க' என்று அறிவித்தனர். இன்னும் எத்தனைநாள் தங்கினாலும் அவர்கள் விருந்திடத் தயார் என்றுதான் கூறுவரென்று நம்புகிறேன். நல்லவேளையாக மறுநாள் ரயில் புறப்பட்டது. இல்லாவிட்டால் சாப்பாட்டு நிர்வாகம்சோதனைக்குள்ளாகியிருக்கும்! இச்சோதனையை நடத்தவிடாமல் ஒரு நாளோடு வேலை நிறுத்தத்தை முடித்துக் கொண்ட தோழர்களுக்கு வரவேற்புக் குழுவின் நன்றி உரித்தாகுக!

எங்கும் கருப்பு மயம்!

சென்னை அமைச்சர்கள் கருஞ்சட்டைப் படைக்குத் தடை விதித்தாலும் விதித்தார்கள்! தூத்துக்குடியை அவர்கள் பார்த்திருந்தால் மயக்கம்போட்டுக் கீழே விழுந்திருப்பார்கள். நல்லவேளை! அவர்களில் யாரும் அங்கே வரவில்லை! காணுமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருந்தது கருப்பு நிறம்! தூத்துக்குடியில் கடைத் தெருக்களில், சிறிய வீதிகளில், சந்து பொந்துகளில், வீடுகள், மாடமாளிகைகளில் அனைத்திலும் எங்கு நோக்கினும் கருங்கொடி பறந்துகொண்டிருந்தது! அல்லது கருப்புடையணிந்தவர்கள் காணப்பட்டார்கள். சட்டைதான கருப்பென்று எண்ணவேண்டாம. வேட்டி, சட்டை, மேலே போட்டிருக்கும் துண்டு, பைக்குள் வைத்திருந்த கைக்குட்டை, கையில் வைத்திருந்த விசிறி இத்தனையும் கருப்புமயமாகக் கொண்டிருந்த ஒருவரை நான் பார்த்தேன்! அவரும் கருப்பு நிறம்! வேறு என்ன வேண்டும் போங்கள்! நாகரிகமாகக் கருப்புக் கோட், கருப்புத்துண்டு போட்டுக்கொண்டு வந்தவர்களும் இல்லாமலில்லை. கருப்புக் கைக்குட்டையையோ கருப்புக் கொடியையோ அடையாளமாகக்கொண்டு வந்தவர்களும உண்டு. பெண்கள் கருப்புச் சேலையும் குழந்தைகள் கருப்புடையும் அணிந்திருந்த காட்சி மகிழ்ச்சியூட்டுவதா யிருந்தது. வெள்ளையாக உடுத்தியவர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் தங்கள்'முடி'யை எண்ணி வேறு கருப்பு வேண்டாமென்று எண்ணினரோ என்

நினைத்தேன். விசாரித்ததில அவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்று தெரியவந்தது. மறு நாள் பார்த்தேன் முதல் நாள் பார்த்த பல காங்கிரஸ்காரர்களை. அவர்களும் கருப் பணிந்து வந்திருந்தனர். ஐயத்தோடு சட்டையைத் தொட்டுப் பார்த்தேன். முரடாயிருந்தது. என் ஐயம் தீர்ந்தது. அவர்கள் ஓமாந்தூரார் கட்சி என்று முடிவு கட்டிக்கொண்டேன். கறுப்புடை போடாதவர்களை வெறுத்தார்கள் அங்கு கூடியிருந்தோர். எரித்துவிடுவது போல அலட்சியமாகப் பார்த்தார்கள். கறுப்புடை போட்டவர்கள் நடந்த மிடுக்கு நடையும அணியாதவர்கள் நடந்த 'அப்பாவி' நடையுமே வேறுபாட்டினை விளம்பரப் படுத்திற்றென்னலாம் செல்வர் முன் வறியவர் என்ற உவமைதான் கறுப்புடைக்காரர் முன் கறுப்பணியாதார் என்பதனை நன்கு விளக்கும்!



போலீஸார் இந்தக் கருப்பு மட்டும் வேண்டாமென்று தடை செய்துவிட எண்ணினர். ஆனல் முடியவில்லை. வருகின்ற ரயிலிலெல்லாம் வந்திறங்கிய கருஞ்சட்டைத் தோழர்களைக் கண்டதுமே அவர்கள் மனம் மாறியிருக்க வேண்டும். மிரட்டிப்பார்த்திருக்கின்றனர்; ஊர்வலத்தைத் தடைசெய்ய எண்ணியிருக்கின்றனர், கூடிய மக்களோ ஆ... குறிக்கோளின்பால் அவர்கள் கொண்டுள்ள பற்றும போலீஸைத் திகைக்க வைத்தது மட்டுமின்றி அதிகார வெறி நீங்கப் பெற்ற அன்புடையோராய் அவர்களைப் பழகச் செய்தன.

4

முதல் நாள் பிற்பகல் 4-30 மணிக்கு மீண்டும் மாநாடு கூடிற்று. தலைவராகப் பெரியாரை முன்மொழிந்து பெரு மக்கள் பலர் பேசினர். திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் தலைமை ஏற்றுச் சுமார் 3 மணிநேரம் அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். காந்தியார் மறைவு பெரும் இழப்பு என்பது பற்றி விளக்கினார்கள். கழகம் பிரசார இயக்கமே ஒழிய ஒரு கட்சியல்ல என்று எடுத்துக் கூறினார்கள். சட்டசபைக்குப் போகவேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெளிவுபடுத்தினார்கள். கழக வளர்ச்சி பற்றியும் திட்டங்கள் பற்றியும் விளக்கம் தந்தார்கள் அடுத்த மாநாட்டுக்குள் சூத்திரப் பட்டம் ஒழியவேண்டும; இல்லையேல் இரண்டாயிரம்பேர் மூவாயிரம் பேர் உயிரைக்கொடுத்தாவது பரிகாரம் காண்போம் என்று சூளுரைத்தார்கள். புல்லேந்தும் தோழர்கள்

வாளேந்தி வருவதை வரவேற்றுப் பேசினார்கள். கழக வேலைகளைப் பற்றிப்பேசினார்கள். நோய்வாய்ப் பட்டிருந்தும் பெரியார் அவர்கள் அளவுகடந்த உற்சாகத்தோடு ஊர்வலத்திலும் மாநாட்டிலும் கலந்துகொண்டதும் மூன்று மணி நேரம் உணர்ச்சிப் பெருக்கோடு சொற்பொழிவாற்றியதும் மக்களுக்கு வியப்பை யளித்தன. லட்சக் கணக்கில் திரண்டிருந்த மக்கள் பெரியார் பேச்சை அமைதியாகக் கேட்டதும் அவ்வப்போது ஆரவாரம் செய்ததும் கண்கொள்ளாக் காட்சிகள். இரவு 7-45க்கு மாநாடு முதல்நாள் நிகழ்ச்சி முடிவுற்றது.

5

இரண்டாம் நாள் காலை 9-மணிக்கு நிகழ்ச்சிகள் தொடங்கின. தோழர் ஜனார்த்தனம் அவர்கள் தாலமுத்து நடராசன் படத்தையும், தோழர் எஸ். குருசாமி அவர்கள் வ. உ. சி. படத்தையும், தோழியர் குஞ்சிதம் அம்மையார் அவர்கள் அன்னை நாகம்மையார் படத்தையும், தோழர் அழகிரிசாமி அவர்கள் பன்னீர்ச் செல்வம் படத்தையும், தோழர் ஆசைத்தம்பி அவர்கள் திராவிட நாடு படத்தையும், தலைவர் பெரியார் அவர்கள் காந்தியார் படத்தையும் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்கள். மனோரஞ்சிதம், பாரிஜாதம் என்ற எட்டுவயதுச் சிறுமிகள் இருவர் உணர்ச்சியோடு சொற்பொழிவாற்றினர். பின்னர் தோழர்கள் சி. பி. சின்னராசு. மு. கருணாநிதி, மா. இளஞ்செழியன், என். வி. நடராசன் ஆகியோர் பேச்சு நிகழ்ந்தது. தலைவர் அவர்கள் கழகக் கட்டுப்பாடுகள் பற்றிச் சில தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். இத்துடன் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

பிற்பகல் நிகழ்ச்சிகள் 3-மணிக்குத் தொடங்கின. முப்பத்திரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன. பெரியார் அவர்கள் அரியதொரு முடிவுரை நிகழ்த்தினார்கள். இப்பொழுது கிடைத்துள்ள சுதந்திரம சர்க்கஸ் சுதந்தரம் என்றும் வலியவர்கள் எளியோரை வதைக்கத்தான் இது பயன்படுமென்றும் கூறினார்கள். "காங்கிரசை வளர்த்தவர்கள் நாங்கள். பிராமணர்கள் தெருவிலும் வரமுடியாதபடி திண்டாடியபோது அவர்களுக்கு மேடை வாங்கிக் கொடுத்தவர்கள் நாங்கள். ராஜகோபாலாச்சாரியாருக்கு தமிழ் பேசத் தெரியாது. விடு பிரித்துக் கிடந்தால் விடு அவிழ்த்துக் கிடக்கிறதென்பார். அவருக்கும் சத்தியமூர்த்தி ஐயருக்கும் தமிழ் கற்றுக்கொடுத்தவர்கள் நாங்கள். இப்பொழுது ராஜகோபாலாச்சாரியார் கவர்னர் ஜெனரல்—அவர் உருப்படக் காரணமாயிருந்த நான் இப்படியிருக்கிறேன்" என்று பெரியார் அவர்கள் உணர்ச்சி ததும்பப்பேசியபோதுபந்தலில் அமைதி அரசோச்சியது. "மக்கள் நம்பிக்கை எங்களுக்குத்தான் இருக்கிறது—எங்களுக்கு வெளிச் செல்வாக்கு இல்லையென்று யார் கூறமுடியும்? திராவிடநாட்டுப் பிரிவினைக்கு மராட்டியர்கள் ஆதரவு இருக்கிறது.ஹைதராபாத்திலிருந்து



அழைப்பு வருகிறது- எங்களிடம் திட்டமில்லையென்று பலர் கூறுகிறார்கள். எந்தத் திட்டம் எங்களிடம் இல்லை? ஒன்றைப் பார்த்துக் காப்பியடிப்பது எங்கள் வழக்கம் இல்லை. ரஷ்யாவும் பார்த்துப் பின்பற்றக் கூடிய திட்டம எங்களுடையது. நாங்கள் புத்தகப் பூச்சிகள் அல்ல'' என்று பெரியார் கூறியபோது திராவிடம் பூரித்தது. போராட்டம்பற்றிப்பெரியார் குறிப்பிடும்போது "ஒரு லட்சியத்தையடையத்தான் போராட்டமேயொழிய வெறும ஜம்பத்திற்காகவோ, விருப்புக்காகவோ போராட்டம் அவசியமில்லை. தொட்டதற்கெல்லாம் சட்ட மறுப்புச் செய்யக் கற்றுக் கொடுத்தவர்கள் இப்பொழுது படும்பாடு நாம்அறிந்ததுதான். ஆகஸ்ட் கலவரத்தின்போது சென்னை மாகாணக கவர்னர் சிறிதும் அச்சமின்றி மோட்டாரில் சென்று கொண்டிருக்க முடிந்தது. இப்பொழுது நடப்பதோ சுயராஜ்யம். இதில் மந்திரிகள் முள் வேலி போட்டுக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது—காரணம் காலித்தனத்துக்கு மாதிரி காட்டியது. நாங்கள் காலித்தனத்தை வளர்க்க மாட்டோம்'' என்று குறிப்பிட்டார்கள். பார்ப்பனர் மாநாடு பற்றிப்பேசும்போது, இதுதான் அவர்கள் கடைசி மூச்சென்றும் அவர்கள் ராஜ்யம இப்பொழுதுதான் நடக்கிறதென்றும குறிப்பிட்டு பார்ப்பனர்கள் வாழை இலை போன்றவர்கள், திராவிடர்கள் முள்ளுச்செடி போன்றவர்களென்றும், வாழையிலை வந்து மோதினாலும் சரி, முள்ளுச்செடி வாழையிலைமீது மோதினாலும் சரி வாழையிலைதான் கிழியுமென்றும் பார்ப்பனர்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளும்படியும் எச்சரித்தார். இந்த நாட்டில் பார்ப்பனர்கள் தொல்லையில்லா விட்டால் இந்நாடு, இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யாபோன்று சிறந்து விளங்கியிருக்கும் என்று தெளிவுறுத்தினார். மதுரை மாநாட்டை எரித்தவர்வந்து தம்மிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் என்ற செய்தியைப் பெரியார் குறிப்பிட்டபோது இன உணர்ச்சி எக்காளமிட்டது.

கடவுள் கோயிலிலே இல்லையென்றும், ஒழுக்கத்திலே, நாணயத்திலே, யோக்கியமாக நடப்பதிலே தான் இருக்கிறதென்றும் விளக்கம் கூறினார்.

கரூர் நிதிக்கு ஏறக்குறைய ஆயிரம்ருபாய் உண்டியல்மூலம் மாநாட்டுப் பந்தலில் வசூலிக்கப் பெற்றது.

அடுத்த மாநாட்டினை நடத்துவதற்குக் கோயமபுத்தூர், தஞ்சை, சென்னைப் பிரதிநிதிகள் போட்டிபோட்டுக்கொண்டு முன்வந்தனர். ஐயா அவர்கள் காரியக் கமிட்டியைக் கலந்து முடிவு கூறுவதாகக் கூறினார்.

இரவு 7-மணிக்குப் பெரியார் பேச்சு முடிந்தது. மக்கள் உணர்ச்சியில் வார்க்கப்பட்ட உருவங்களாய் வெளியேறினர். இரவு 10-மணிக்குத் தொடங்கிய தோழர் M. R. ராதாவின் நாடகம் காலை 4-மணிக்குச் சிறப்பாக முடிவுற்றது.

6

ரயில்வே வேலைநிறுத்தத்தால் மேலும் ஒரு நாள் தோழர்கள் தூத்துக்குடியில் தங்கும் படியாயிற்று; அதனால் தூத்துக்குடியைப்பற்றிப் பல உண்மைகளைத் தெரிந்து கொள்ள வசதியாயிற்று.

தூத்துக்குடி வாழ்விழந்த மங்கையாகக் காட்சியளிக்கிறது. இயற்கை வளமிருந்தும் அதனைப் பயன்படுத்த ஆட்சியினர் முன் வராததால் அவ்வளம் பயனற்றிருக்கிறது. தூத்துக்குடி பெரிய நகரம். கடற்கரைப் பட்டினம். ஆனால் அக்கடற்கரையைச் சீர்படுத்தி மக்கள் பயன்படுத்தும் வண்ணம் அமைக்க அரசாங்கம் முன்வரவில்லை. அருமையான கடற்கரையாகச் செய்தால் மக்கள் பொழுது போக்கவும் இன்பம் துய்க்கவும் இயலும். இப்பொழுதுதான் ஏதோ ஏற்பாடு ஆகிருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள். துறைமுகம் கட்டப்படவில்லை. முன்பு கடல் வாணிபம் செழித்திருந்த இந்நகரை இவ்வாறு புறக்கணித்தது ஏனோ தெரியவில்லை! வ. உ. சி. இந்த ஊரில் தோன்றியதுதான் காரணமாயிருக்க வேண்டும். வீரன் சிதம்பரம் காட்டிய தீரத்தைக் கண்டு வெகுண்டு வெள்ளை ஆட்சி தன் கோபத்தை யெல்லாம் சிதம்பரம் பிள்ளை மீது காட்டியதோடு நில்லாமல் தூத்துக்குடிமீதே காட்டி யிருக்கிறதென்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. இல்லையேல்

கவிஞருக்குப் பரிசு

சென்ற 2-5-48ம் நாள் திருச்சி இரத்தினவேலுத் தேவர் ஹாலில் நகைச்சுவையரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் வேலைக்காரி நாடகம் நடைபெற்றது. அது போது எழுத்தாளர் மாநாட்டு நிதிக்கென அன்றைய வசூல் ரூ 700-ம் கொடுக்கப்பட்டது.

பிறகு, கே. ஆர். ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபைனர் முன்னர் நடத்திய 'மணமகள்' என்னும்நாடகத்திற்குப் பாடல்கள் எழுதியுதவிய கவிஞர் நாரா நாச்சியப்பன் அவர்களுக்கு நூறு ரூபாய் பரிசாக நகைச்சுவையரசரால் வழங்கப்பட்டது.

தூத்துக்குடி முதல் தரத் துறைமுகப் பட்டினமாக இன்று விளங்கியிருக்கும். இனியேனும் அரசாங்கம் தூத்துக்குடியைச் சிறப்பிப்பதில் முன்னிற்குமென்று நம்புகிறேன்.

கடற்கரை சென்ருேம். தோணியில் ஏறினோம். சாலத்தீவு கண்டு களித்தோம். கடலோரம் தூத்துக்குடியில் அமைதியாகவிருக்கிறது. கடல் அமைதியாயிருக்கும் செய்தி வியப்பானதுதான். ஆனுல் திராவிடக் கழக மாநாட்டிற்குக் கூடிய கடலன்ன லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அமைதியாயிருந்ததை நினைக்கும்போது கடலமைதி எனக்கு வியப்பளிக்க வில்லை.

மே, 11, செவ்வாய்க்கிழமை ரயில் புறப்பட்டது. வரும்போதிருந்த நெருக்கடி தோற்றுவிட்டது. ரயிலில் உள்ளும் புறமும் உச்சியிலும் தோழர்கள். கருங்கொடி ரயிலில் பறந்தது. பெரியார் வழியனுப்பினுர். தோழர்கள் 'பெரியார் வாழ்க' என்று முழங்கிக்கொண்டே தூத்துக்குடியினின்றும் விடைபெற்றனர்.

தூத்துக்குடிப் பாசறையை விட்டுக் கிளம்பிய படைவீரர்கள் எண்ணத்தில் இரண்டு உருவங்கள் பதிந்திருந்தன. ஒருவர் வ. உ. சி. மற்றவர் பெரியார்.

அப்பெரும் படைக்குப் புதியதோர் உலகம் செய்யும் ஆற்றலைத் தந்தவர்கள் அவர்கள் தாமே! அவர்களாலன்ருே இன்று இனப்போர் முரசம் எங்கும் நிறை நாதமாக இருக்கிறது!

வாழ்க தூத்துக்குடி!
வாழ்க திராவிடம்!

அடுத்த இதழில்!

கால நெருக்கடியில் நெருக்கப்பட்டும், அன்பர்களின் ஆவலைப் பூர்த்திசெய்யவேண்டித் 'தூத்துக்குடி இதழாக' இந்தப் பொன்னி ஒருவாறு கொண்டுவரப் பட்டது. திராவிட மக்கள் பலரிடமிருந்தும் சுவையானதும் சிந்திக்கக்கூடியதுமான பல கடிதங்கள் மாநாட்டின் நடைமுறைகளைப் பற்றி வந்துள்ளன. அடுத்த பொன்னியில் வெளியிடுகிறோம். தோழர்கள் சுவைத்தின்புறலாம்.

ஆசிரியர்.

திராவிடர் கழக வேலைத்திட்டம்

தூத்துக்குடியில் பெரியார் அறிவுரை

தோழர்களே! எனக்கு உண்மையில் சட்டங்களை மீறவோ, ஜெயிலுக்குப் போகவோ சிறிதும் ஆசையில்லை. உங்களையும் மீறச்செய்ய, சிறைக்கு அனுப்ப ஆசையில்லை. ஆனவரை தடுக்கவே முயற்சிக்கிறேன். இன்றியமையாத சந்தர்ப்பத்தைச் சர்க்கார் அளிப்பார்களானால் ஓடி ஒளிய மாட்டேன்; ஒளியச்சொல்லவுமாட்டேன். அதை நல்வாய்ப்பாகவே கொள்ளுவேன். அப்படிச் சந்தர்ப்பம் வர வேண்டாம் என்றே ஆசைப்படுகிறேன்.

சர்க்கார் நடந்து கொள்ளும் போக்கில் நம்நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதும், அதை அரசியல் மொழியாக்குவதும், உத்தியோகத்துக்கு இந்த மொழித் தேர்ச்சியையும் சேர்ப்பதும் திராவிடமக்களை வம்புச்சண்டைக்கு இழுக்கும் அகம்பாவ, ஆணவ காரியமாகும். எந்தக் காரணத்தைக் கொண்டாவது காங்கிரஸ் சர்க்கார் இந்தத் திட்டத்தைக் கைவிட்டாக வேண்டும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எந்தக் கணக்குப்படியானாலும் வகுப்புப் பிரித்துப் பார்ப்பனர்களுக்கு அவர்கள் சமுதாய எண்ணிக்கையாக 100-க்கு 3-வீதத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கீழ்த்தர உத்தியோகமாகிய பியூன் முதலிய உத்தியோகங்களிலும் அந்த வகுப்பார் அவர்கள் விகிதாச்சாரம் ஒப்புக்கொண்டு வேலைசெய்ய முன்வர வேண்டும். அப்படி இல்லையானால் மேல்தர உத்தியோகங்கள் அவர்களுக்கு வழங்கப்படக் கூடாது. ஏனெனில் நாட்டுக்காகப் பொது சேவைக்காகக் "இழ்தரம்" என்று சொல்லப்படும் உடலுழைப்பு வேலையை, ஏவல் ஏற்கும் வேலையை ஏற்க ஒரு ஜாதி ஒப்புக்கொள்ளவில்லையானால், அவர்களுக்கு, அந்த ஜாதிக்கு மேல்தர வேலை எதற்காகக் கொடுக்க வேண்டும்? பாட்டுக்கு ஒரு ஜாதி—பதவிக்கு ஒரு ஜாதியா?

மற்ற வகுப்பார் பார்ப்பனர் பார்க்கும் உத்தியோக எண்ணிக்கை அளவுக்குச் சரிசமமாய் வரும் வரை பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் வழங்குவது நிறுத்தப்பட்டே ஆகவேண்டும். இப்படிச் செய்யவில்லையானால் இந்த நாட்டில் என்றுமே சமுதாய சமத்துவம் ஏற்படாது. இது சர்க்கார் காரியாலயங்கள் மாத்திரமல்லாமல், சர்க்கார் அனுமதி, ஆதரவு உள்ளதும் சலுகைக்கும் மேற்பார்வைக்கும் கட்டுப்பட்டதுமான எல்லா ஸ்தாபனங்களிலும் இந்த விகிதம் இருக்கும்படியான நிபந்தனைகளைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

பொது மக்கள் வரிப்பணத்தில் நடக்கும் சர்க்கார் பள்ளிக்கூடங்களில், திண்ணைப்பள்ளிக்கூடம் முதல் சர்வகலாசாலை வரையில் வரி கொடுக்கும் மக்கள் பாட்டாளி மக்கள் சமுதாய (வகுப்பு) எண்ணிக்கை விதமே பிள்ளைகள் சேர்க்கப்பட வேண்டும். மீதிப்பிள்ளைகள் சொந்தத்தில் படித்துக் கொள்ளட்டும்.

சர்க்கார் என்பது ஒரு ஜாதிக்குத் தர்ம சத்திரமா?

வக்கீல்கள் எண்ணிக்கையை நிர்ணயம், (குறைவு) செய்து வகுப்பு மக்கள் எண்ணிக்கைப் படியே சன்னது கொடுக்க வேண்டும். நாட்டில் பிழைக்க எத்தனையோ தொழில் இருக்கப் பாட்டாளிமக்கள் வரிப்பணத்தைக் கொள்ளையடிப்பதை ஏன் தொழிலாய் ஒரு ஜாதியாரே கொள்ளவேண்டும்?

உருப்போட்டு ஒப்புவிப்பது என்பதே எந்தப்படிப்புக்கும் பரிட்சை முறையாக இருக்கக் கூடாது. அப்படியானால் அர்ச்சகனும், புரோகிதனுமேதான் ஒப்புவிக்க முடியும்.

பகுத்தறிவும், உடல் சக்தியும், உலக ஞானத்திறமையும், நல்லபரம்பரையும், இயற்கைநற்குணமும் முக்கிய பரிட்சையாக இருக்கவேண்டும். அந்தப் பரிட்சையும், உத்தியோகம் கொடுக்கப்படும் காலத்தில்தான் பரிட்சிக்கப்பட வேண்டுமே ஒழிய, பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு ஆண்டும் பரிட்சை என்பது தேவையில்லாததாகும்.

எந்த உத்தியோகத்துக்கும் அதற்குத்தேவையான அளவுதான் தகுதி வைக்கவேண்டும்.

பள்ளிப்படிப்பில், ஒரு மாணவன், வகுப்பில் இத்தனைநாள் கிரமப்படி ஆஜராகி விஷயங்களைச் சரிவர கவனித்துக்கொண்டிருந்த காலம் தீர்ந்தால் போதும் என்று மேல் வகுப்புக்கு அனுப்பப்பட வேண்டும். பரிட்சைமூலம் மக்களைப் பள்ளியில் மேல் வகுப்புக்குச் செல்லவிடாமல் கழிக்கக்கூடாது, நிறுத்தக்கூடாது.

பொதுப் படிப்புக்காக ஒரு பையன் 15 வருடம் அதாவது வருடத்திற்கு ஒரு வகுப்பு தேறினாலும் B. A. முடிக்க 15 வருடம் படிக்க வேண்டுமென்றால் இது மிகவும் அநீதியான காரியமாகும். ஏனெனில் 6-ம் வயதில் பையன் படிக்கத்தொடங்கினால் B. A.-க்கு 21 வயது ஆகிவிடுகிறது. அப்புறம் தொழில் படிப்பு படிக்க 3, 4, 5, ஆண்டுகள் தேவைப்படுகின்றன. பிறகு அவன் அதில்அநுபவம் பெற்றவனாவதற்கு 4, 5 ஆண்டுகளாகும். இவற்றால் பையனின் நல்ல மூர்த்தன்னியமான ஆயுட்காலம் வீணாகப்போகிறதல்லாமல் பெற்றோர்களுக்கும்எவ்வளவு பணம்,எவ்வளவு நாளைக்குச் செலவிட வேண்டி இருக்கிறது? எத்தனை காலத்தை மாணவ வாழ்க்கையில் கழிப்பது? காலம், பணம் செலவழித்தவனுக்கெல்லாம் உத்தியோகம் கிடைக்கின்றதா?

18-வது வயதில் ஒரு பையனைக் கலியாணம் செய்து கொள்ள அனுமதிக்கிறோம்; சட்டமும் அனுமதிக்கிறது. அவன் படிப்பு முடிந்து வேலைக்குத் தயாராக மாத்திரம் 22-வயது 25-வயது ஆகவே வேண்டுமா? தொட்டில் ஒரு கையிலும் புத்தகம் ஒரு கையிலும் பிடித்துக்கொண்டும் மனைவியை ஒரு கண்ணில் பார்த்துக்கொண்டுமா படிப்பது? இளங்குழந்தையையும், மனைவியையும் கொஞ்ச நேரமெங்கே? இப்படிப்பட்ட இந்தப் படிப்பு செல்வவான்களுக்கும் செல்வமில்லாவிட்டாலும் படிக்க வசதியும் வாய்ப்பும் உள்ள பிறவியினால் பிறவிச் செல்வர்களான பார்ப்பனர்களுக்கும் தான், அதாவது மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 5, 6 பேர்களுக்குத்தான் ஏகபோக உரிமை உள்ளதாக இருக்கிறதே தவிர

ஏழைமக்களுக்கும் புத்தி, சக்தி, திறமை, உலகஞானம், நற்குணம், நற்செய்கை, நல்லகுண பரம்பரைஉள்ள மக்களுக்கும் படிக்க வாய்ப்பில்லாமலே போய்விடுகிறது. ஆகவே இது வருணாச்சிரம தர்ம முறைக்கேற்றபடி ஏற்படுத்தப்பட்ட படிப்பு முறையாகவே இருக்கிறது. வர்ணாச்சிரமம் கூடாது என்கின்றபோது வர்ணாச்சிரமப் படிப்பு முறையும் ஒழிந்தாக வேண்டாமா?

ஆதலால் ஒரு அளவுக்கல்வி வரை பொதுக்கல்வியாக எல்லா சமுதாய மக்களும் படிக்கும் வயது வந்த 100-க்கு 100 பேரும்படிக்கும்படியாக செய்து விட்டு, உத்தியோகத்திற்கும், தொழிலுக்கும் அவசியமான கல்வியை மாத்திரம், ஜாதி வகுப்புப் பிரிவு மக்கள் எண்ணிக்கைகள்படி கொடுத்துவரலாம். சர்க்கார் நடப்புககு அல்லாமல், அதற்கு வேண்டிய மக்கள் எண்ணிக்கைக்கு அல்லாமல், மேல் படிப்பு என்பதற்கு மக்கள் வரிப்பணத்தில் ஒரு காசும் செலவு செய்யாமல் இருக்கவேண்டும்.

கல்விக்குச் செலவு செய்யப்படும் காசு அவ்வளவும், மக்களை எழுதப்படிக்க, கணக்குப் போடத் தெரியுமளவுக்கு மாத்திரம் செலவு செய்ய வேண்டும்.

ஆங்கிலம் தேவை இல்லை என்று ஆனபிறகு, தமிழ் நாட்டுக்குச் சமஸ்கிருதம் தேவை இல்லை, இந்தி தேவை இல்லை. என்று ஏன் செய்யக்கூடாது? அப்படி ஏற்பாடு செய்துவிட்டால் படிப்பின் தொல்லை பெரும் அளவுக்கு நீங்கிவிடும். அதற்கு ஆகும் காலமும், செலவும் பெரும அளவுக்கு நீங்கிவிடும். கட்டடம், காலேஜ், "ஆப்பாட்டம், ஆஸ்டல்" பேயாட்டமும் வெகுதூரம் குறைந்துவிடும். உருப்போடுவதே பரீட்சை யோக்கிதையாவதும், 15 வருடம் படிப்புக்காகப் பாழாவதும் தானாகக் குறைந்துவிடும்.

100-க்கு 75 உபாத்தியாயர்களைப் பெண் உபாத்தியாயர்களாகவே இருக்கச் செய்யலாம். அல்லது கணவன் மனைவி இருவரையும் ஜோடி உபாத்தியாயர்களாக ஆக்கிச் செல்வை சிக்கனமாக்கலாம். ஆண் உபாத்தியாயர் மனைவியைக் காபபாற்ற வேண்டும். பெண் உபாத்தியாயர் புருஷனைக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் வாழ்க்கைக்கு மாதம் 100, 200 300, 500 1000, விதம் சம்பளம் தேவைப்படும். ஜோடி உபாத்தியாயர் ஆனால் செலவு சுருங்கலாம்.

ஓலைச்சாலைக் கொட்டகைகள் கல்வி கற்றுக்கொள்ளப் பாமர மக்களுக்குப் போதுமானதாகும்.

அந்தந்த நாட்டில் அந்தந்த மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும். அந்தந்த நாட்டு மொழியிலேயே சர்க்கார் நடக்கவேண்டும்.

அந்தந்த நாட்டுக் கலையே பொது அறிவுக்கு உணவாக இருக்க வேண்டும்.

ஒரு மாகாணம்தான் ஒரு நாடாய் இருக்க வேண்டுமே ஒழிய ஒரு கண்டம் 2000 மைல் நீளம், 1500 2000 மைல் அகலம் கொண்ட ஒரு பெரும் தேசம் ஒரு நாடு ஆகக்கூடாது. இதுதான் பரிசுத்தமான தேசியம் என்பதாகும்.. இம்முறை கைக்கொள்ளப்பட்டால் 5 வருடத்தில் படிப்பின்மை இந்நாட்டில் ஒழிந்துவிடும்.



வள்ளுவர் விருந்

4. இன்பக் கோபம்!

திருக்குறள் முனிசாமி

'அடடா! இந்தப் பெண்களுக்குத்தான் ஏன் இப்படிப்பட்ட குணங்கள் அமைந்துவிட்டனவோ தெரியவில்லை: அவர்கள் உள்ளத்தில் உண்டாகும் எண்ணக் குவியல்கள் தாம் எத்தனை? சிட்டாகப் பறக்கும் சிந்தனைச் சுடர்களின் இன்ப ஓட்டந்தான் என்னே! ஆழ்ந்த அனுபவமும் அறிய முடியாத அவர்களின் போக்கே தனி!" என்று இவ்வாறு திகைத்து விடுகிறான் அந்தக் காதலன். 'பல நாட்கள் பழகிவிட்டோமே இனி எளிதில் அவள் உள்ளத்தை அறிந்து கொள்ளமுடியும்' என்று எண்ணுகின்ற அவன் ஏமாந்து விடுகிறான். ஏமாற்றத்தில் கவலை கொள்கிறானில்லை: ஆச்சரியப்பட்டு ஆனந்த மடைகிறான். அங்கும் அவள் இன்பத்தேன் அவன் இதயத்தைக் குளிர்விக்கின்றது.

இன்பத்தை அனுபவிப்பது ஒரு துறை. அதைப் பெருக்கிக் கொள்ளுவது ஒரு முறை. அந்த முறையில் தனிவழிகள் பலவுண்டு என்பது அவளுக்குத்தான் தெரியும்! உள்ள இன்பத்தையும் உண்டுமகிழ வாய்ப்புக் கிட்டாமலும் வழி தெரியாமலும் உள்ள பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஏன்? வாழ்க்கையென்பதே ஒரு பாரம்; அதிலும் 'சம்சார வாழ்க்கை' ஒரு சாகரம் என்ற சண்டிப் பேர்வழிகள் கூட்டமுந்தான் இருந்து வருகிறது. இந்தப் படுமோச எண்ணங்களை நம் நாட்டில் இறக்குமதி செய்துவிட்ட ஆரியக் குப்பைகளை அன்றே 'தூ' வென்று உதறித் தள்ளினார் நமது வள்ளுவனார். "இதோ இன்பம். ஏ! மனிதா! இல்லற இன்பத்தின் சுவைப் பெருக்கினில் களித்திரு. காதல் வாழ்க்கையில் கனிந்து சொட்டும் இன்பத் துளிகளில் மாந்தித் திளைத்து விளையாடு" என்று அன்புரை கூறும் திராவிடப் பெருமறையாம் திருக்குறளினை அருளினார்.

இன்பத் தடாகத்தில் விளையாட வரும் நாயகனைத் தடுமாற வைப்பதை ஒரு தனி வேலை

யாகக் கொண்டிருக்கின்றாள் காதலி. நல்ல எண்ணந்தான்! ஆனால் எளிதாகச் செய்து விடக்கூடியதில்லை என்றுதான் நமக்குப்படுகிறது. அவளுக் கென்னவோ சாதாரணமாக அமைந்திருக்கிறது. இந்த வாழ்க்கையே இன்பத்திற்குத் தான் என்று வாழுகின்ற அந்த நாயகன் வருகின்றான். கட்டழகன், கண்ணுக்கினியன். தாவடையும் பூரிப்பினை உள்ளத்தில் மறைத்து வைத்துக் கொண்டு அவனோடு விளையாடுகிறாள் நாயகி. விளையாட்டில் ஒருசக்தி. அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தோ கோபிக்கின்றாள் என்றே நினைக்கின்றான். ஆம். கோபந்தான். ஏன்? அவள் பேச்சு அப்படி இருக்கிறது. காரணமும்தான் காட்டுகின்றாளே, அந்தப் பொல்லாக் காதலி! தக்க பதில் சொல்லத் தெரியவில்லை. 'இன்பம், இன்பம்' என்றுமட்டும் ஏங்கி இருந்தால் போதுமா? நாயகி என்ன லேசானவளா? அவன் குற்றம் உள்ளவனே என்று நிலைநிறுத்திக் கூறுகிறாள். விழிக்கின்றான் நாயகன். வேறு என்ன செய்வான்?

நாயகன் அன்பினைப் பல விதத்தில் சோதிக்கின்றாள் நாயகி. பெண்களுக்கென்ற உரிமைகள் சில உண்டு. நாயகனிடம் ஆவலோடு கேட்பர். சில சந்தர்ப்பங்களில் நாயகன் விரும்பியதைத் தரவில்லை என்றால் வருத்தத்தையும் மறைத்துக் கொள்வர். அப்பொழுதெல்லாம் நாயகன்மீது குறை கூறிக் குற்றம் சாட்டவும் துணியமாட்டார்கள். ஆனால் நாயகன் செய்யக்கூடாத-எண்ணக்கூடாத—தவறு ஒன்று உண்டு. அந்தத் தவறுக்கு ஆளாகிவிட்டான் என்று தெரிந்ததோ காதலிகள் கடுங் கோபங்கொண்டு கனல் கக்கப் பேசுவர். சிலர் கதறியழுது இருப்பர். அதுதான், தனது நாயகன் வேறொருத்தியைக் காதலிக்கின்றான் என்பது! இந்தத் தவறினை-செய்கையினை—எந்த நாயகியும் பொறுக்கமாட்டாள். அந்தக் குற்றத்தைக் காட்டிஞல்தான்-பொய்யாகவேனும் சிறிதுநேரத்திற்கு—நாயகனைத் தடுமாற வைக்கலாம் என்பது இந்த நாயகியின் ஆவல். "அப்படிச் செய்யவில்லையே" என்று நாயகன் கொஞ்சும்மொழிகள் கூறிப் பலப்பல பேச அவளுக்கு இன்பம் பெருகிக் கொண்டே போகுமாம்!

"நீயே என் உயிர். நீயே இவ்வுலகம். உன்னையன்றி வேறொருவரையும் நான் அறியேனே! தணியா இன்பப் பொய்கை நீயன்றோ! இவ்வுலகிலும் சரி! மறு உலகிலும் சரி! எவ்வுலகுக்குச் சென்றாலும் உன்னைப் பிரியேனே! கண்ணே ஏன் கோபம்? மறு மாதரைச் சிறிதும் பார்ப்பவன் அல்லவே! ஏன் வருத்தம்? என் வார்த்தைகளை நம்பு" என்று பலப்பல பேசி நாயகியின் எண்ணத்தை மாற்ற முனைகின்றான் தலைவன். அவன் கூறுவதும் உண்மைதான். அவளென்னவோ நம்புவதாகக் காட்டிக்கொள்ளுகின்றாளில்லை. "என்னை வெறுத்துப் பிறர்பால் காதல் கொண்டிருக்கின்றீர்கள்! தங்கள் பேச்சும், போக்கும் தெரிகின்றனவே!" என்று ஏதேதோ கூறி அவனை மயங்க வைக்கின்றாள். 'பேசினாலும் இப்படியெல்லாம் தவறு கண்டுபிடித்துக் குற்றம்

கூறுகின்றாளே' என்று எண்ணிய அவன் சிறிது நேரம் பேசாமல் தான் இருப்போமே என்று இருந்து விடுகின்றான். எதிரில் இன்பநாயகி உட்கார்ந்திருக்கின்றாள். அவளைப் பார்த்த வண்ணம் அமைதியாக இருக்க ஆரம்பித்தான்.

“நினைத்து இருந்து நோக்கினும்” என்று ஆரம்பிக்கின்றான் நாயகன். (இப்படி யெல்லாம் பேசுகின்றாளே — கோபிக்கின்றாளே—என்று எண்ணிக் கொண்டு பேசாமல் அவளைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்) அப்பொழுதும் அவள் விட்டாளில்லை. “ஓகோ 'அதை' யெண்ணிப் பார்க்கின்றீர்களா?” என்று கூறிய வண்ணம் ஏதோ அவன் உள்ளத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தைக் கண்டு கொண்டவள் போலப் பேசிக் கோபித்துக் கொண்டாள். “காயும்” (கோபிக்கின்றாள்) என்கின்றான். “நினைத்து இருந்து நோக்கினும் காயும்” என்ற இனிய சொற்களில் ஆசிரியர் இக்கருத்தினை அமைக்கின்றார்.

உண்மையில் நாயகன் மனதில் ஒன்றுமே மறைத்து வைத்திருக்கவில்லை. ஆனால், அவளோ அப்படிப் பேசுகின்றாள். அவனுக்கொன்றும் விளங்கவில்லை. “நான் ஒன்றும் நினைக்கவில்லையே! ஏன் இவ்வாறு கோபிக்கின்றாய்” என்று மெதுவாகக் கேட்க ஆரம்பித்தான். “தாங்கள் ஒன்றும் நினைக்கவா இல்லை? ஏன் பொய் சொல்லுகின்றீர்கள்? என் அவயவங்கள் ஒவ்வொன்றையும் உற்று உற்றுப் பார்க்கின்றீர்களே! எதற்காக அப்படிப் பார்க்கின்றீர்கள் என்று எனக்குத் தெரியுமே” என்று தொடர்ந்து பேசலானாள். தான் நினைக்காத ஒன்றினைப் பேசுகின்றாளே என்று திகைத்து அப்படியே அச்சடித்த பதுமை போல நிமதியானான். அவள் பேசுகின்றாள் “யாரை நினைத்துக் கொண்டு இப்படி என்னை உற்று நோக்குகின்றீர்கள்? [யார் உள்ளி நோக்கினீர்] வேறு ஒருத்தியைத் தாங்கள் காதலித்து வருகின்றீர்கள்! அவளுடைய அழகுருவத்தை மனதில் வைத்துக்கொண்டு, அவளுடைய அழகிய அங்கங்களுக்கு என்னுடைய அங்கங்கள் அழகில் மேலானவைகளா இல்லையா என்றல்லவா ஒப்பிட்டுப் பார்க்கின்றீர்கள்! என்னை வெறுத்துத்தான் இருக்கின்றீர்கள்” என்று கூற அதைக் கேட்ட நாயகன் “நாயகியை உற்று நோக்கினாலும் தவறா?” என்று வியப்புறுகின்றான். நாயகியின் இன்பக் கோப வார்த்தைகள் அழகுற விளங்குகின்றன.

நினைத்திருந்து நோக்கினும்
காயும்; அனைத்துநீர்
யார் உள்ளி நோக்கினீர் என்று

[நினைத்து — இப்படிப் பேசுகின்றாளே என்று நினைத்து, இருந்து — பேசாமல் உட்கார்ந்து, நோக்கினும்—பார்த்துக் கொண்டிருந்தாலும், காயும் — கோபிக்கின்றாள், அனைத்து—அவ்வாறு என் அங்கங்களை எல்லாம், நீர்—நீங்கள் பார்த்து ஒப்பிடுவது, யார் உள்ளி நோக்கினீர்—நீங்கள் காதலிக்கின்ற எந்த மகளிரின் அங்கங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றீர், என்று—என்று கூறிக் கோபித்துக்கொண்டாள்.]



தூசுநிறை என்னுளத்தைத் தூய்மை யாக்கித்
துய்க்கின்ற நற்காதல் பதியம் வைத்து
மாசில்லா நீர்பாய்ச்சி மணம் பரப்பும்
மலர்பறிக்க எண்ணுங்கால் அதனைச் சுற்றிப்
பாசவலை போட்டிருக்கும் முட்கள் தம்மைப்
பார்த்துவிட்டுப் பறிப்பதற்கே அஞ்சு தல்போல்
ஏசிடுவார், உலகத்தார் என்றால் அன்றே
எதற்காக என்உளத்தில் அன்பைப் பெய்தீர்?

நீர்ப்பரப்பில் பூத்துநிற்கும் அல்லி தன்னை
நினைத்தவண்டின் எண்ணமதைத் தடுத்து நிற்கும்
நீர்த்தடத்தைத் தாண்டுதற்கே அஞ்சி நின்றால்
நினைத்தமனம் மகிழ்ந்திடுமோ? வழிவ ழியாய்ப்
போர்த்தொழிலில் திளைத்திருக்கும் தமிழ மன்னன்
மாற்றாரின் வலிமைகண்டு மயங்குதல் போல்
ஆர்க்கின்றார் சமுகத்தார் என்றால் நீங்கள்
அன்புவித்தை என்உளத்தில் துளிர்க்கச் செய்தீர்?


ஆழ்கடலில் ஒளிசிதறும் முத்தைக் காண
ஆயத்தம் செய்துபின்னர் அலைகள் கோடி
சூழ்கடலில் அறியாமே சுறா இருந்து
சேறிகடலில் ஆழத்தில் சேர்க்கு மேஎன்(று)
ஆழ்ந்துசிந் தனைபுரிந்தால் அவர் நினைத்த
அழகுமுத்துக் கிடைத்திடுமோ? அவரைப் போலே
பாழ்செய்வார் காதலினை எனத் தெரிந்தும்
பாவைஎன்றன் உள்ளத்தில் அன்பேன் பெய்தீர்?



தோன்றுகின்ற திரைமறைவில் துடியிடைகள் நோகத்
துடிக்கின்றாள்; மான்நடனம் அஃதில்லை யேனும்,
நான்வேண்டேன் கலவியினி எனநைந்து கூவ
நயமான குயிற்பாடல் அஃதில்லை யேனும்
நான்செய்யும் கற்பனையோ இன்பத்தின் கோட்டை!
நற்றுணைவி இன்பமுற எனக்கென்ன வேட்டை!
தேன்மழலை தரும்மதலை வருமினிய வாழ்வைச்
சிந்தித்தேன்; தேன்மொழியின் தொல்லையினைக் காணேன்!

நடிப்பிருக்க ஒடிப்பிருக்க நங்கையவள் ஆட
நடனத்தை நான்காணும் வேளையிலே அந்த
இடுப்புத்தான் வெடுக்கென்றன் கண்களினைக் கேட்கும்!
இடைநடனம் தடையின்றி இயற்றுபவள் இன்றோ
விடுத்ததிரை மறைவினிலே மிகஇன்ன லுற்று
விறிட்டுத் துடிக்கின்றாள்! என்துணைவி யன்றோ!
எடுத்தள்ள ஒருகுழவி என்னுக்கம் என்றே
எண்ணுகையில் துணைவிபெறும் தொல்லையினைக் காணேன்!

நான்காண என்வலக்கை நல்லிடையைச் சேர
நலங்கூட்டி நகைகாட்டி நாணத்தைக்காட்டித்
தேன்காட்டும் சேயிழையாள் திண்டாடு கின்றாள்!
திருவுலகம் உயிர்வாழச் செய்தொழிலில் நின்றாள்!
நான்போவேன் என்பின்னால் நன்மகனும் வருவான்
நற்றமிழால் 'அப்பாவோ' எனநவின்று திற்பான்
என்னென்பேன்; இப்படியாய் நான்எண்ணும் வேளை
என்மனைவி தொல்லையினை நான்காண வில்லை!



பச்சைச் சொக்காய்க் காரியே!
    பவளமூக்குக் கிளியம்மா!
இச்சை பெருக்கும் அழகினை
    எங்கு சென்று பெற்றிட்டாய்?

பச்சை ஆல மரத்திலே
    பழங்கள் தொங்கும் கிளையிலே
அச்ச மின்றி உட்கார்ந்தே
    "அக்கா! அக்கா!" என்கின்றாய்

ஓடி ஒளிந்த சிறுதம்பி
    உருக்க மாக அழைப்பதுவாய்த்
தேடித் தேடிச் சுற்றுகின்ற
    தேனார் பெண்ணைக் காணாயோ?



சின்னக் குறும்பு செய்யாதே
சிறுபெண் தேடி அலைகின்றாள்
இன்னும் அவளை ஏமாற்றும்
எண்ணம் வேண்டாம்; பறந்துவிடு

"சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை
சொந்தமாய்த் தெரியா" தென்கின்றார்
இன்றும் நமது மாணவர்கள்
இருக்கும் நிலையும் அதுதானே!



தொடர் கதை



கண் திறக்குமா?

ஆசிரியர்: நக்கீரன்

நடந்த கதை:

வாழ்க்கையில் பல சோதனைகளுக்கு ஆளான சந்திரமோகன், தன் கடைசி காலத்தில் தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் நோக்கி "கண் திறக்குமா?" என்ற கேள்வியுடன் தன் 'கதை'யைச் சொல்கிறான்.

சட்டப் பரீட்சையில் தேறிய சந்திரமோகன் பாரிஸ்டர் பரந்தாமனிடம் தொழிற்பயிற்சி பெறுகிறான். இந்தச் சமயத்தில், ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தி மகாத்மா கைதியானார் என்பதாகத் தேசமெங்கும் அவருடைய விடுதலையைக் கோரிக் கிளர்ச்சி செய்யப்படுகிறது. பாரிஸ்டர் பரந்தாமன், காந்திஜி கைதியானதற்காகப் பரம சந்தோஷப்படுகிறார். சந்திரமோகனுக்கு இது பிடிக்கவில்லை. அவன் அந்தக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டதன் பயனாகப் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறான். அங்கே தன்னைப் போலவே சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்த பாஸ்கரன் என்னும் தன் பள்ளித்தோழன் ஒருவனைக் கண்டு சந்திரமோகன் ஆறுதலடைகிறான்.

சந்திரமோகனைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த தாயாரும் தங்கை பரிமளாவும் சர்க்காரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்துவிடுமாறு அவனிடம் வேண்டுகின்றனர். அவன் அதற்கு மறுதலிக்கிறான். ஒருநாள் பாரிஸ்டர் பரந்தாமனின் ஏக புதல்வி சாந்தினி எதிர்பாராத விதமாக அவனை ஆஸ்பத்திரியில் சந்தித்து "என்னை மறவாதீர்!" என்று கேட்டுக்கொள்ளுகிறாள்.

இதற்கு மத்தியில் மகனைப் பிரிந்த தாயார் இயற்கை எய்துகிறாள். தன்னந்தனியளான பரிமளாவுக்குச் சாந்தினி ஆறுதல் கூறுகிறாள். தஞ்சையிலிருந்து வந்திருந்த பரிமளாவின் மாமா அவளைத் தம்முடன் அழைத்துச் செல்கிறார். தன் அண்ணாவின் செய்கையில் வெறுப்புக் கொண்ட பரிமளா, தாயார் இறந்ததைப் பற்றி மட்டும்தான் அவனுக்குத் தெரிவித்தாளே தவிர, தான் தஞ்சைக்குச் சென்றுவிட்டதைப்பற்றித் தெரிவிக்கவில்லை.

விஷயம் தெரியாத சந்திரமோகன் விடுதலையடைந்ததும் நேரே சென்னைக்கு வருகிறான். தன் வீட்டில் வேறு யாரோ குடியிருப்பதைக் கண்டு அவன் திகைக்கிறான். இந்தச் சமயத்தில் அவன் வீட்டு வேலைக்காரியாயிருந்த விசாலம் அவனைச் சந்தித்து, விஷயம் அனைத்தையும் எடுத்துக் கூறுகிறாள். ஆனாலும் அன்றே தஞ்சைக்குச் செல்வதற்கு அவனுடைய பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை. ஆகவே ஒன்றும் புரியாமல் அன்றிரவைப் பாரிஸ்டர் பரந்தாமன் வீட்டில் கழிக்கலாம் என்ற உத்தேசத்துடன் அவருடைய வீட்டை நோக்கி அவன் நடக்கிறான். அங்கே அவனுக்கென்று ஓர் அதிசயம் காத்திருக்கிறது. ஏகாதிபத்திய பக்தரான

பாரிஸ்டர் பரந்தாமன் அசல் காந்தி பக்தராகக் காட்சியளிக்கிறார்!

அன்றிரவு சந்திரமோகன் படுத்துக் கொண்டிருந்த அறைக்குள் சாந்தினி ஒரு கடிதத்தை விட்டெறிந்து விட்டுப் போகிறாள். அந்தக் கடிதத்தில் 'நாளை மாலை என்னை ஜெனரல் ஆஸ்பத்திரி வாயிலண்டை வந்து பார்க்கவும்' என்று கண்டிருக்கிறது. அதன்படி மறு நாள் மாலை இருவரும் சந்திக்கின்றனர். அங்கே, பரிமளா தன் மாமாவின் மகனான சிவகுமாரனால் விரஸமாக நடத்தப்படுகிறாள் என்ற செய்தி, சாந்தினி வாயிலாகச் சந்திரமோகனின் காதில் விழுகிறது. அதற்கு மேல் ஒரு நிமிஷம் கூட அவனால் தாமதிக்க முடியவில்லை. சாந்தினியின் உதவியைக் கொண்டு அவன் உடனே தஞ்சைக்குச் செல்கிறான். வழியில் சிவகுமாரனால் வஞ்சிக்கப்பட்ட செங்கமலத்திற்கு அவன் ஒரு சிறு உதவி செய்ய நேருகிறது. அப்பொழுதான் ஈன்றெடுத்த சின்னஞ்சிறு சிசுவுடன் அவள் காட்சியளிக்கிறாள். செங்கமலத்துக்காக இரங்கிய சந்திரமோகன், அவளையும் அவள் தாயாரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு தன் மாமாவின் கிராமமான செய்யாமங்கலத்துக்குச் செல்கிறான். அங்கே பரிமளாவைக் காணவில்லை. அவன் நினைத்தபடி சிவகுமாரனிடம் செங்கமலத்தைச் சேர்க்கும் முயற்சியிலும் அவனுக்குத் தோல்வியே ஏற்படுகிறது. ஆகவே வேறு வழியின்றி அவன் அவர்களுடன் சென்னைக்குத் திரும்புகிறான்.

வழியில் செங்கமலத்தின் தாயார் ஊர் வாயை அடைப்பதற்காகத் தன் மகளுக்குத் தானே தாலியைக் கட்டி வைக்கிறாள். அதைக்கண்டு வியந்த சந்திரமோகனுக்கு அவள் தன் கதையைச் சொல்கிறாள். தான் ஏற்கனவே கல்யாணம் செய்து கொண்டிருந்த ஒரு பிராமணரைக் காதலித்து மணந்ததாகவும், அவர் இறந்த பிறகு தான் 'சூத்திரச்சி' என்பதற்காக அவருடைய சொத்தில் தனக்கு ஒன்றும் பங்கு கிடைக்கவில்லை என்றும் அதன் பயனாகத் தானும் தன் மகளும் நாதியற்று நிற்க நேர்ந்ததாகவும் அவள் கூறுகிறாள். செங்கமலம் அவளுடைய தாயார், சந்திரமோகன் ஆகிய மூவரும் எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கும்போது அங்கே, அவர்களுக்கென்று ஓர் அதிசயம் காத்திருக்கிறது. எதிர்பாராத விதமாக அங்கு வந்திருந்த பாஸ்கரன், செங்கமலத்தின் தாயாரைக் கண்டதும் 'சித்தி' என்கிறான். செங்கமலமோ அவனைக் கண்டதும் ஓடி ஒளிந்து கொள்கிறாள்.

பாஸ்கரன் செங்கமலத்தைப்பற்றியும் அவளுடைய தாயாரைப்பற்றியும் அறிந்து கொள்ள ஆவலுறுகிறான். ஆனால் ஊரில் நோய்வாய்ப்பட்டிருக்கும் தன் தங்கையை அவன் அவசரமாகச் சென்று பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, திரும்பி வந்ததும் அவர்களைப்பற்றித் தெரிந்து கொள்ளலாமென்று அவன் ஊருக்குச் சென்று விடுகிறான். சந்திரமோகன் அவளிடம் விடைபெற்றுக்கொண்டு பரந்தாமன் வீட்டுக்கு வருகிறான். அங்கே அவரைக் காணாமல் ஏமாற்றமடைந்து திரும்பும்போது சாந்தினி எதிர்ப்படுகிறாள். அவள் சந்திரமோகனை நேரே அவன் வீட்டுக்குப் போய்ப் பரிமளாவைப் பார்க்குமாறு சொல்கிறாள். அண்ணனைக்கண்ட பரிமளா, "இன்னொருமுறை நீ தேசத்துக்காகச் சிறைசெல்லும்போது, எனக்கு ஒரு துளி நல்ல விஷமாகப் பார்த்து வாங்கிக்கொண்டு வந்து கொடுத்துவிடு!" என்று கேட்டுக்கொள்கிறாள். அவளைச் சமாதானப் படுத்துவதற்குள் பாரிஸ்டர் பரந்தாமன் வருகிறார்.

பதின்மூன்றாம் அத்தியாயம்

- பிழைக்கத் தெரியாத பிள்ளை -

பாரிஸ்டர் பரந்தாமனைக்கண்டதும் நான் அறையைவிட்டு வெளியே வந்தேன். இருவரும் மாடிக்குச் சென்று உட்கார்ந்தோம். "இப்பொழுதுதான் ஊரிலிருந்து வந்தாற்போலிருக்கிறது!" என்றார் பரந்தாமன்.

"ஆமாம், ஸ்டேஷனிலிருந்து நேரே உங்களுடைய வீட்டுக்குத்தான் வந்திருந்தேன். நீங்கள் வெளியே போயிருப்பதாகச் சொன்னார்கள்" என்றேன் நான்.

"இன்று நம் குருகுலத்தைக் கொஞ்சம் நேரில் சென்று கவனிக்க வேண்டியிருந்தது. அதற்குத்தான் போயிருந்தேன்."

"ஏன், இன்று என்ன விசேஷம்?"

"பெரியமனிதர் ஒருவர் வந்து இன்று நம் குருகுலத்தைப் பார்வையிடப் போகிறார்......"

"எப்பொழுது வந்து பார்வையிடப் போகிறார்?"

"சாயந்திரம் வந்து பார்வையிடுவார்."

"அவர் சாயந்திரம் வரப் போவதற்கு நீங்கள் காலையிலேயே போவானேன்?"

"காரணமில்லாமல் போவேனா? அந்தப் பெரிய மனிதர் வந்து நம் குருகுலத்தைப் பார்வையிட்ட பிறகு, அவரைச் சும்மா அனுப்பி வைக்கலாமா? அவரிடமிருந்து ஓராயிரம் இரண்டாயிரமாவது குருகுலத்துக்கென்று பிடுங்கிக்கொண்டு அனுப்பவேண்டாமா?"

"அப்படியே இருக்கட்டும். அதற்கு இப்போதே போய் என்னத்தைச் செய்வது?"

"உனக்கு ஒன்றுமே தெரியாது; எல்லாம் சொன்னால் தான் தெரியும். இன்றைக்கு ஒருநாளாவது நம் குருகுலத்தில் வேலை செய்யும் பையன்கள்......"

"வேலை செய்யும் பையன்களா......!"

"இல்லை, படித்துக் கிழிக்கும் பையன்கள் என்றுதான் வைத்துக் கொள்ளேன்!—'தொழிற் கல்வி' என்றால் என்ன ஐயா அர்த்தம்? ஆதரவற்ற அநாதைச் சிறுவர்களிடம் சம்பளமில்லாமல் வேலை வாங்கிக் கொள்வது என்றுதானே அர்த்தம்?"

"இல்லை, அது உங்களுக்கென்று நீங்கள் தனியாகக் கற்பித்துக் கொண்டிருக்கும் அர்த்தம்!"

"உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! ஏனெனில், உனக்கு என்னை மட்டுந்தானே தெரிகிறது? மற்ற குருகுலக்காரர்களைத் தெரியாதல்லவா? தெரிந்திருந்தால் இப்படிச் சொல்ல மாட்டாய்! வயிற்றுக்குச் சோறில்லாமல் தொழிற் கல்வி கற்றுக் கொள்ள முடியுமா? என்வீட்டுச் சோற்றைப் போட்டு ஊரார் வீட்டுக் குழந்தைகளுக்குத் தொழிற் கல்வி கற்றுக்கொடுக்க எனக்கென்ன தலையெழுத்தா?"

"அதற்கு இந்த மாதிரி ஜோலிக்கெல்லாம் நீங்கள் போயிருக்கவே கூடாது."

"அதுதான் முன்பே சொன்னேனே, அப்பா! இம்மாதிரி ஏதாவது செய்தால் தான் பேரும் புகழும் அடைய முடியுமென்று!"

"என்ன இருந்தாலும் இது நம் மனச் சாட்சிக்கே விரோதமானது... .....!"

"அட, நீ ஒண்ணு! மனச் சாட்சியாவது, மண்ணாங்கட்டியாவது! சொல்வதைக் கேள், அப்பா, இன்றைக்காவது அந்தப்பையன்கள் கொஞ்சம் நல்ல சாப்பாடாகச் சாப்பிட வேண்டுமோ இல்லையோ......!"

"ஏன், இத்தனை நாள் மட்டும் என்ன சாப்பிட்டுக் கொண்டு வந்தார்கள்?"

"குருகுலத்துத் தோட்டத்தில் விளையும் கீரையோடு சரி! இன்று முட்டைக்கோஸ், காரெட், டொமோட்டோ, பொட்டோட்டோ—இப்படி என்னவெல்லாமோ இருக்கும். மோர், நெய், எல்லாம்கூட இன்று உண்டு. இவற்றையெல்லாம் அந்தப்பையன்கள் இன்று தங்களுக்காகச் சாப்பிடாவிட்டாலும் பெரிய மனிதருக்காகவாவது சாப்பிட்டுவிட்டுப் போகட்டுமே! அவற்றையெல்லாம் பார்த்து விட்டு அவர் பிரமித்துப் போகமாட்டாரா? சாயந்திரம் வேறு பாதாம் ஹல்வா, பக்கோடா, காப்பி எல்லாம் தயார் செய்யச் சொல்லியிருக்கிறேன். பையன்கள் பாடு இன்று யோகம்! தினந் தினம் இப்படி யாராவது பெரிய மனிதர்கள் வரமாட்டார்களா என்று தவம் கிடப்பான்கள்!—அவர்களுக்கு மட்டுமென்ன, இன்று எனக்குந்தான் யோகம்! இன்றைக்கெல்லாம் செலவழிந்தால் என் கைப்பணம் நூறு ரூபாய்க்குமேல் செலவழியாது; அதையும் பின்னால் குருகுலத்தின் செலவு கணக்கில் எழுதி விடுவேன். சாயந்திரம் அதற்குப் பதிலாக ஆயிரமோ இரண்டாயிரமோ வந்துவிடும்........."

"ஆயிரமோ, இரண்டாயிரமோ வந்தால், அதை வரவு கணக்கில் எழுத மாட்டீர்களா?"

"எழுதாமலென்ன, பேஷாய் எழுதுவேன். அதற்கேற்றாற்போல் செலவைக் காட்டுவது தானா பிரமாதமான காரியம்?"

"பொதுக் காரியத்தில் இறங்கி இப்படியெல்லாம் செய்வது துரோகமாகும். இதற்குத்தான் என்னைப் போன்ற சிலர் இம்மாதிரிக் காரியங்களையெல்லாம் சர்க்காரே மேற்கொண்டு நடத்த வேண்டுமென்று சொல்வது!"

"ஐயையோ! இதெல்லாம் தர்ம காரியங்களாயிற்றே! உடல், பொருள், ஆவி மூன்றையும் தேசத்துக்குத் தத்தம் செய்த உத்தமோத்தமர்களின் லகங்கரியமல்லவா இது! இதைப் போய்ச் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்வதற்கு உன்னுடைய நாவு கூசவில்லையா? சொல்வார் சொன்னாலும் கேட்பாருக்கு மதியில்லாமலா போய்விடும்? நீங்கள் என்னதான் கரடியாகக் கத்தினாலும் இம்மாதிரி விஷயங்களையெல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்வார்களா?" என்று சொல்லிப் பாரிஸ்டர் பரந்தாமன் லேசாகச் சிரித்தார்.

"அப்படியானால் உடல், பொருள், ஆவி மூன்றையும் தேசத்துக்குத் தத்தம் செய்த உத்தமோத்தமர்களில் நீங்களும் ஒருவராக்கும்!" என்றேன், நானும் சிரித்துக் கொண்டே.

"இல்லாமலென்ன......?"

"பின் நீங்கள் இன்னும் இந்த உலகத்தில் இருந்து கொண்டிருக்கிறீர்களே; உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்த பிறகு நீங்கள் மேல் உலகத்திலல்லவா இருந்திருக்க வேண்டும்?"

"நான் மட்டுந்தானா இங்கிருக்கிறேன்? என்னைப் போல் இன்னும் எத்தனையோ உத்தமோத்தமர்கள் இல்லையா? அவர்களெல்லாம் மேல் உலகத்துக்குப் போகும்போது நானும் போகிறேன்! அதற்கு இப்பொழுது என்ன அவசரம்? அதுவரை இந்தக் கட்டை தேசவிடுதலைக்கும் சமூகவிடுதலைக்கும் தன்னால் இயன்றவரை பாடுபட்டுவிட்டுப்போகட்டுமே!'

"உங்களுக்குத் தேச விடுதலை, சமூகவிடுதலையெல்லாம் ஏதோ 'பிஸினஸ்' மாதிரியல்லவா இருக்கிறது!"

"சந்தேகமென்ன, 'பிஸினஸ்' தான்! நான் இதை ஒப்புக்கொள்ளுகிறேன; மற்றவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம் என்கிறார்கள்! இதுதான் அவர்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம். இல்லையென்றால் பெருக்கும் புகழுக்கு ஆசைப்பட்டு வக்கில் தொழிலை உதறித் தள்ளிவிட்ட நான் எப்படிப் பிழைப்பது?"

"இப்படிப் பிழைப்பதற்கு நீங்கள் வக்கில் தொழிலையே விட்டிருக்க வேண்டாமே!"

"அது தெரியாதா எனக்கு? நீ பேசாமலிருந்து நான் சொல்வதைக் கேளேன்! ஏதோ உனக்கும் என்னுடைய அனுபவம் பயன்படட்டுமே என்றுதான் சொல்கிறேன். உலகத்தில் எல்லாருமே உன்னைப் போல் இருந்துவிட முடியுமா? நீயும் உன்னைப் போன்ற சிலரும் தேசவிடுதலை, சமூக விடுதலை என்று சொல்லிக்கொண்டு கஷ்டப்படுகிறீர்கள் என்பதற்காக என்னைப் போன்றவர்களும் உங்களுடன் சேர்ந்துகொண்டு கஷ்டப்பட வேண்டுமா? அப்படிக் கஷ்டப்படுவதினால் யாருக்கு என்ன லாபம் கிடைக்கப் போகிறது? இதனால் உங்களுக்கும் லாபமில்லை, உலகத்துக்கும் லாபமில்லை. இந்த உண்மை இப்பொழுது உங்களுக்குத் தெரியாது: பின்னால் தெரியும். அப்பொழுது என்னைப் போன்றவர்களின் மேதையை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தான் போகிறீர்கள். அது கிடக்கட்டும்; சாயந்திரம் நீ திலகர் குருகுலத்துக்கு வாயேன்! இரவு எட்டு மணிவரை அந்தப் பெரிய மனிதர் குருகுலத்தைச்சுற்றிப் பார்வையிடுவார். பார்வையிட்ட பிறகு பணத்தையும் கொடுத்துவிட்டுப் போவார்!—அது மட்டுமா? அந்த அசட்டு மனிதர் என்னுடைய தன்னலமற்ற சேவையை வேறு பாராட்டிப் பேசிவிட்டுச் செல்வார். வேலையற்ற நிருபர்கள் அந்த வைபவத்தைப் பற்றிப் பல பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பி வைப்பார்கள் —இப்படியாக எல்லாம் ஒரே வேடிக்கையாயிருக்கும்—வருகிறாயா? உன்னையும் அந்தப் பெரிய மனிதருக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறேன். பாவம், அவரும் ஒருவிதத்தில் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவரே! நான் ஒருவிதத்தில் பிரபலமடையப் பார்க்கிறேன்; அவர் இன்னொரு விதத்தில் பிரபலமடையப் பார்க்கிறார். என்னுடைய வழியில் பணத்துக்குச் செலவில்லை; அவருடைய வழியில் பணத்துக்குச் செலவிருக்கிறது. பலன் என்னவோ ஒன்றுதான்! — எதற்கும் புத்தி வேண்டுமோ, இல்லையோ! அது எல்லோருக்கும் ஒரே வித

மாகவா அமைந்து விடுகிறது? —என்ன சொல்கிருய், சுந்தர்!... வருகிருயா? இப்படிப்பல வைபவங்களில் கலந்து கொண்டால் தானே அப்பா, சீக்கிரத்தில் பெரிய மனிதனுக முடியும்?"

"இப்படியெல்லாம் செய்து நான் ஏன் பெரிய மனிதனுக வேண்டும்? அதைவிடச் சின்ன மனிதனுகவே இருந்து விட்டுப் போகிறேனே!"

"அதற்கு நீ உன்னுடைய தொழிலை விட்டுவிட்டுச் சிறைக்குச் சென்றிருக்கக் கூடாது. எது எப்படியானுலும் குடும்பம் நடந்தாக வேண்டுமே!"

"குடும்பம் நடக்காமல் எங்கே போகிறது? எல்லோரும் அவரவர்கள் குடும்பத்தை மட்டும் கவனித்துக்கொண்டால் தேசம் உருப்படுவதுதான் எப்படி?"

"தேசம் உருப்படுவது ஒரு பக்கம் இருக்கட்டும். அப்பா! முதலில் நீ எப்படி உருப்படப் போகிருய்?"

"இந்த வீட்டை நான் விற்று விடப் போகிறேன்...."

"என்ன!"

"ஆமாம், இந்த வீட்டை நான் விற்றுவிடத் தான் போகிறேன்!"

"சரி, இந்த வீட்டை விற்ற காசு உன்னை எத்தனை நாளைக்குத் தாங்கும்?"

"வீட்டை விற்றுவிட்டுச் சும்மாவா இருக்கபோகிறேன்? அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு பத்திரிகை நடத்தப் போகிறேன்!"

"பத்திரிகை என்ருல் பணக்காரர்களுக்குவால்பிடிக்கவேண்டுமே!"

"அது வேறு பத்திரிகை! என்னுடைய பத்திரிகை பாட்டாளிகளின்சுகத்திலும் துக்கத்திலும் பங்கெடுத்துக் கொள்ளும்."

"பாட்டாளிகளுக்காவது, சுகமாவது! அவர்களுக்கும் துக்கம்தான்; உனக்கும் துக்கம் தான! வீணுகக் கெட்டலைய வேண்டாம்; நான்சொல்வதைக் காதில் வாங்கிக்கொள். உன்னுடைய பெற்ருேர் ஞாபகார்த்தமாக இருக்கும் இந்த ஒரு வீட்டையும் விற்று விட்டுத் தவிக்காதே! இப்போதைக்கு நான் பரிமளாவிடம் நூறு ரூபாய் பணம் கொடுத்திருக்கிறேன். அத்துடன் ஒரு சமையற்காரனையும் பார்த்து அனுப்பியிருக்கிறேன். குறைந்தபட்சம் ஒரு மாதம் கஷ்டமில்லாமல் காலம் போகும். அதற்குள் நீ வேண்டுமானல் உன்னுடைய விருப்பம் போல் பத்திரிகைத் தொழிலில் இறங்கிக்கொள். ஆனல் அதற்காக இந்த வீட்டை 'விற்க வேண்டாம். பத்திரிகைத் தொழிலுக்கு வேண்டிய பணத்தை நான் தருகிறேன். என்ன இருந்தாலும் பட்டும்பட்டாமலும் பத்திரிகை நடத்தினல்தான் பிழைக்கலாம். பணக்காரரை வெறுத்துக் கொண்டு யாரும் எந்தவிதமான காரியமும் செய்துவிட முடியாது. ஆனைப்பட்ட காந்தியே பணக்காரர்கள் அடியோடு ஒழியவேண்

டும் என்று சொல்லவில்லை; அவர்கள் கோயில் தர்மகர்த்தாக்கள் போல ஏழைகளுக்குத் தர்மகர்த்தாக்களாக இருக்க வேண்டுமென்றுதான் சொல்கிறார். அவரே அப்படிச் சொல்லும்போது நீயும் நானும் எந்த மூலைக்கு?"

"சரி, அப்படியானால் உங்களால் எனக்கு எவ்வளவு பணம் தர முடியும்?"

"எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன்!"

"இது என்ன, வேடிக்கையாயிருக்கிறதே! உங்களுக்கு ஏது அவ்வளவு பணம்?"

"தேசபந்து நிதிக்குப் பத்து லக்ஷ ரூபாய் சேர்ப்பதென்று முடிவு செய்திருக்கிறார்களே, உனக்குத் தெரியாதா?"

"தெரியாமலென்ன, அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தமில்லா விட்டால் என்ன? நாம் சம்பந்தப் படுத்திக் கொள்ளவேண்டும். அதற்காக நான் ஐம்பதினாயிரம் ரூபாய்வரை சேர்த்திருக்கிறேன். எல்லாம் எனக்காகக் கொடுத்ததுதான்; ஸி. ஆர். தாஸுக்காக யாரும்கொடுத்து விடவில்லை. அப்படிக் கொடுத்தவர்களில் சிலர் தங்கள் பெயரை வெளியிட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள், வேறு யாராவது நிதிக்கு வந்து விடப் போகிறார்களென்று! நல்ல வழியில் சம்பாதித்தவர்களெல்லாம் ஐந்து பத்து என்று கொடுத்தால், கெட்ட வழியில் சம்பாதித்தவர்கள் ஆயிரம் ஆயிரமாகக் கொடுக்கிறார்கள். நாம் வேண்டுமானால் நல்லவழியில் சம்பாதித்துக் கொடுத்தவர்களின் பணத்தையெல்லாம் ஸி. ஆர். தாஸ் நிதிக்கே அனுப்பி விடுவோம்; கெட்ட வழியில் சம்பாதித்துக் கொடுத்தவர்களின் பணத்தை........."

"நமஸ்காரம்! என்னை இத்துடன் விட்டு விடுங்கள். நான் கீழே இறங்கிப் போய்விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு நான் வெறுப்புடன் எழுந்து நடந்தேன்.

"ஐயோ! பிழைக்கத் தெரியாத பிள்ளையாயிருக்கிறாயே, அப்பா!" என்று சொல்லிக் கொண்டே பரந்தாமனும் எழுந்து என்னுடன் வந்தார். அதற்குள் சமையல்காரன் வந்து என்னைச் சாப்பிட அழைத்தான். "நீங்களுந்தான் சாப்பிட்டு விட்டுப் போங்களேன்!" என்றேன் நான், வக்கீல் ஐயாவைப் பார்த்து.

"நான்சாப்பிட்டுவிட்டுத்தான் வந்தேன். நீ போய்ச் சாப்பிடு. சாப்பிட்டுவிட்டு நான் சொன்னவற்றைப் பற்றி நன்றாக யோசித்துப் பார்! சாயந்திரம் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு 'விர்' என்று நடந்து சென்று காரில் ஏறிக்கொண்டார் அவர்.

(தொடரும்)



பாரதிதாசன் பரம்பரை

[அண்ணாமலைநகர் இராமநாதன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றும் புலவர் இரா. குழூஉத் தலைவன் அவர்கள் பாரதிதாசன் பரம்பரையினராக அறிமுகம் பெறுகிறார் "உறங்காதே" என்ற எழுச்சிப்பாடல் அவர் இயற்றியது —ஆசிரியர்]

உறங்காதே!

மேடையிலே தெருவினிலே விட்டில் எங்கும்
  விளையாடும் இடங்களிலே நால்வர் மூவர்
கூடுவரேல் முழங்கிடுவார் தமிழர் வாடும்
  கொடுமைகளும், தமிழ்அடைந்த குறைவும் பற்றி;
நாடாளும் நேரத்தில் இப்பேச் செல்லாம்
  நல்லேட்டுச் சுரையாகும்; 'பயன்தான் உண்டோ!
ஆடையிலே பெருமாற்றம் வேண்டும் என்பார்;
  'அடிப்படையில் மாற்றமொன்றும் அமைத்தாரில்லை!

ஆளவந்தார் தமிழ்அமைச்சர் என்றாரும், வாயால்
  ஆக்கிவிட்டார் தமிழ்மொழியை முதன்மை யாக
மாளவந்த மொழிகளெல்லாம் வளம்பெற் றோங்க
  வடவருடன் செய்ததவர் மனமே கூறும்.
தாளைவெட்டிப் பயிர்வளர்க்கும் கதைபோல் எல்லாத்
  தமிழ்ப்புலவர் தமைவாட்டிப் பயிர் வளர்க்கும்
நாள்என்று கழியுமோ? தமிழர் நாடும்
  நல்லுரிமைத் தனியாட்சி பெறும்நாள் என்றோ!

என்இனியும் இந்தநிலை திராவி டத்தில்?
  இழிநிலையைப் போக்காமல் இருப்பதேனோ?
தேன்மதுரத் தமிழ்உண்டு, திண்டோள் உண்டு
  சிங்கமெனத் திரண்டுவரும் இளைஞர் உண்டு
வான்கதிர்போல் வழிகாட்டத் தலைவர் உண்டு
  வலியுண்டு, கையினிலே வாளும் உண்டு
தான்இனியும் உறங்காதே தமிழா! நாட்டைத்
  தலைநிமிர்த்த எழுந்திடடா தடந்தோள் தட்டி!

தமிழ்

தமிழறிவுக் களஞ்சியத்தின் நோக்கங்கள் மூன்று. அவை சென்ற கால அனுபவ அறிவின் தொகுப்பு, நிகழ்கால அறிவுப்பரப்பின் பகுப்பு, எதிர்கால வளர்ச்சிக்கான வகைதுறைகளின் வகுப்பு ஆகியவை. இவ்வாறாக நாட்டு வாழ்வில் முக்காலத்துக்கும் பயனுடைய இம்முழுமுதற் பணியை நிறைவேற்றும் வகையில் காலமும் மக்கள் தகுதியும் சூழ்நிலையும் பெரிதும் உதவுபவையென்பது கூறுமே அமையுமன்றோ? தற்போதைய களஞ்சியத் தொகுப்புப் பணியில் இவ்வகைகளில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படக்கூடும் நிறைவு குறைவுகளை ஆராய்வோம்.

தமிழக நாகரிகம் உலகில் முற்பட்ட நாகரிகங்களிலும் முற்பட்ட நாகரிகமாயினும் களஞ்சியத்தொகுப்பை அது பிற்பட்ட நாடுகளிலும் பிற்பட்டே தொடங்கியுள்ளது. எனினும் அது சரியான காலத்திலேயே தொடங்கப்பட்டுள்ளது என்று கூறலாம். ஏனெனில் வளர்ச்சிக்கான உரம் பெறாத பிஞ்சு நாகரிக நிலையிலும் அது சிறப்புப் பெறாது. வளர்ச்சி ஓய்ந்து இறந்துபட்டு விட்ட நாகரிகங்களிலும் அது சிறப்புறாது. வளர்ச்சியின் ஓர் பேரூழி முடிவுற்று, அடுத்த வளர்ச்சிக்கு வித்தூன்றும் புத்தூழி அல்லது மறுமலர்ச்சி ஊழியிலேயே அது சிறப்புறும். தற்காலத் தமிழகம் அத்தகைய மறுமலர்ச்சி ஊழியின் வாயிலிலேயே நிற்கின்றது என்பதில் ஐயமில்லை.

ஆயினும் தமிழ்நாட்டு மறுமலர்ச்சிக்கும் பிற மறுமலர்ச்சிகளுக்கும் அடிப்படை வேறுபாடுகள் பல உண்டு. அவற்றுள் சிலவற்றை இங்கே கவனித்தல் வேண்டும். தமிழக மறுமலர்ச்சி இயக்கம் இன்னும ஒரு நாட்டியக்கமாகஉருப் பெறவில்லை. தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் ஒரு முகப்பட்ட ஒரே இயக்கமாகவும ஆகவில்லை. அங்ஙனம் ஆவதற்கு நாட்டு மக்களே நாட்டில் முதன்மை பெற்று ஆட்சியும் ஆதிக்கமும் உரிமையும் பெறல் வேண்டும். நாட்டார்வம் நாட்டு மக்களில் மிகப் பெரும்பாலோரின் வாழ்க்கைக் குறிக்கோளாக ஆதல் வேண்டும். இந்நிலை இன்னும் தமிழ்நாட்டில் முழு அளவில் ஏற்படவில்லையன்றோ?

தமிழக மறுமலர்ச்சி இயக்கம் ஒரு கடலெழுச்சியாய்ப் பொங்கியெழாமல் பல அலைகளாகவும், பல ஒழுக்கு—எதிர் ஒழுக்குகளாகவும், சுழல்—எதிர் சுழல்களாகவும் சிதறி உழல்கின்றது. இவை சரியான பண்பாட்டுடன் ஒரு முகப்பட வேண்டும்.

களஞ்சியத் தொகுதியில் முனைபவர்கள் மறுமலர்ச்சிக்

அறிவுக் களஞ்சியம்

கட்டுரையாளர்: அறிஞர் கா. அப்பாத்துரை

காலத்தில் வாழ்ந்தால் போதாது. அதன் முன்னணியில் நிற்பவராய் இருத்தல் வேண்டும். அதன் மேலிடான கலை, சூழல்—எதிர்ச்சூழல், எதிர் ஒழுக்கு ஆகியவற்றில் ஈடுபட்டவரா யிருந்தால் போதாது; அதன் உள்ளார்ந்த ஆழ்கடல் எழுச்சியில் திளைத்தவராய் இருத்தல் வேண்டும்.

இன்று தமிழகத்தில் மறுமலர்ச்சி யியக்கத்தில் எதிர் ஒழுக்கில் திளைப்பவர்கள் தமிழ்ப் பண்பாடுபற்றி ஒரு தவறான கருத்துக் கொண்டுள்ளனர். மேல் நாடுகளிலும் வட இந்தியாவிலும் புத்தம் புதிதாக வளர்ச்சியடைந்த மொழி நாகரிகங்கள் அயல் நாட்டுப் பண்பாடுகளின் மீதே வளர்ச்சியடைந்துள்ளன. தமிழும் அவைபோலத்தானே வளர்ச்சியடைய முடியும் என்றும் அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால் அதே மொழிகளுக்கு ஊட்டமளித்த முதன் மொழிகள் இதற்கு மாறாயிருந்ததை அவர்கள் கவனிக்கத் தவறி விட்டனர்.

ஆங்கிலம், பிரஞ்சு முதலிய மொழிகளுக்குத் தமக்கெனப் பண்பாட்டு வளமும் உரமும் இல்லாதிருந்த காலத்தில் பிற மொழிப்பண்பாடு உரமா யுதவியது இயல்பே. எனினும் இவற்றிற்கு மாறாக மேல் நாட்டு நாகரிகங்களுக்கு உரமூட்டிய மூல மொழிகளான கிரேக்கம், எபிரேயம் முதலிய மொழிகள் தம் பண்பாட்டில் நின்ற நாளளவும் வளர்ச்சியடைந்து, பிற குறைபட்ட பண்பாட்டைச் சார்ந்தும் அழிந்தொழிந்தன.

தமிழின் நிலை கிரேக்க மொழியின் நிலை போன்றது. நீண்ட நாள் வாழ்வு, பண்பாட்டு வளம் ஆகிய வகையில் தமிழ், கடன் வாங்கும் நிலையிலுள்ளதன்று; கொடுக்கும் நிலையிலுள்ளது. உலகின் எந்த அயல் மொழியும் அதற்குக் கடன் தரும் அளவு உயர்வுடையதாகவோ கொடுக்கல் வாங்கல் செய்யும் அளவு சரிநிகர் நிலை உடையதாகவோ கூட இல்லை.

தமிழ், கிரேக்க முதலிய மூல மொழிகளின் நிலை மடியில் கனமுடைய வழிப்போக்கனுடைய நிலையாகும். மற்றப் புதுமொழிகளின் நிலை மடியில் எதுவுமில்

லாமல் கைவிசி நடப்பவர் நிலே யாகும். மடியில் கனமில்லாத வர் அக்காரணத்தால் இரந்தோ, கடனிரந்தோ கவர்ந்தோ பிறர்பொருளைத் தம் முதலாக்க முனைவது இயல்பு. மடியில் கனமுள்ளவர்கள் இவ் வழிகளில் பொருள் பெறுவ தில் கவலையுடையவராகார்; தம் பொருளை இழவாது பேணு வதிலேயே கவலையுடையவரா வர். இவ்வேறுபாடு கண்டால் தமிழர் நிலை தெளிவாகும்.

தமிழகத்தில் தமிழ் வளர்ச் சிக்கு எத்துறையிலும் உதவு வது தமிழ்ப் பண்பாடன்றிப் பிற எதுவுமன்று. மறுமலர்ச்சி இயக்கத்தில், தமிழ்ப் பண்பாடு தழைத்த சங்க காலப் பழமை பேணுவதும், அதன் விளக் கொளியால் புதுமை காண்ப அவும் இரண்டும் தவறன்று. தமிழ்ப் பண்பாடு மீறிய இடத் தில் பழமை அதாவது இடைக் காலப் பழமையும் சரி, மேல் நாட்டின் செரிமானமாகாத அரைகுறைப் புதுமைகளும் சரி, இரண்டும் போலிகளாகவே முடியும்.

ஆகவே தமிழறிவுக் களஞ் சிய முயற்சியில் முனையும் மறு மலர்ச்சியாளர்கள் தமிழ்ப் பண் பாட்டில் நிலைத்த புலவர்களா கவும் அதன் வழி புதுமை காணும் ஆற்றலுடையவர் களாகவும் இருத்தல் வேண் டும்.

●

உ. வே. சாமிநாதையர்

ஐயர் அவர்கள் கல்விக்கும் திற மைக்கும், புகழுக்கும், பெருமை க்கும் காரணமாக விளங்கின, ஈடும் எடுப்பும் இல்லாத மகாவித் துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களையும், தாம் கும்பகோணம் அரசியற் கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்துவிலகி அவ்விடத்தை ஐயர் அவர்களுக்கு அளித்த தமிழாசிரி யர் தியாகராசசெட்டியார் அவர் களையும், ஐயரைச் சிதம்பரம் மீனாட்சிதமிழ்க்கல்லூரியின் தலை மை ஆசிரியராக்கிய ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர் களையும், 'இந்து' ஆசிரியரும் அவர்கள் இனத்தாரும் மறந்து விடுதல் நன்றன்று. அம்மூவரும் இல்லையேல் ஐயர் இல்லை என் பது திண்ணம்.

∴ ∴ ∴

ஐயர் அவர்கள் பல நூல்களைத் தமக்கு ஏற்பத்திருத்தி வெளியிட் டதாக அறிஞர் பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். மேலும் ஐயர் அவர்களின் நூல்களைப் படித்தால் எத்துணை வடமொழிச் சொற்களை, தமிழ்ச் சொற்கள் இருந்தும் வலிந்து தம் நூல்களில் புகுத்தி இருக்கிறார்கள் என்று தெரியும் திருவாவடுதுறை ஆதி னத்தார் B. O. L. பரிட்சையில் முதன்மையாகத் தேறுபவர்க்கு ஐந்தாம்ஜார்ஜ் மன்னர்பெயரால் ரூ. 1000 பரிசு அளிக்கிறார்கள். இந்தப்பரிசு ஆண்டுதோறும் தமி ழர்க்கு வரக்கண்ட ஐயர், ஒரு ஆண்டுபார்ப்பனர்க்கு, மற்றொரு ஆண்டு தமிழர்க்கு என்று பண் டாரசந்நிதியிடம் சொல்லி மாற்றி யதாக நான் கேட்டதுண்டு.

பெரு. வேங்கடாசலபதி



அலையும் வலை

நா. பாண்டுரங்கன்

நகரத்தைக் கடந்து சாலையில் வெகு தொலை வந்து விட்டாள் ஆசிரியை அன்னம். விண்ணில், மாலை நேரத்தில், விரைந்திடும் மேகங்கள் எப்போதும் போல்தான் அன்றும் விதவிதமான வர்ணங்களில் காணப்பட்டன. ஆனால் அன்னத்தின் கண்களுக்கு அவை, அன்று, என்றும் வழங்கும் கவர்ச்சியைத் தரவில்லை!

கிளிகள் கூட்டங் கூட்டமாகக் கீச்சிட்டுக் கொண்டே பறந்து சென்றன. கிளிகளின் சத்தம் கீதமாகத் தோன்றும் அவளுக்கு. ஆனால் அன்று கிளிகள் இசைப்பது கீதமாகத் தோன்றவில்லை; வெறும் கத்தலாகவே தோன்றிற்று!

சாலை ஓரத்தில் உள்ள தோட்டங்களில் ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் தோற்றம் அவளுக்குச் சிந்தனையைக் கிளறிவிடும். பூ விளைப்பது அவர்கள். ஆனால் அவர்கள் வீட்டுப் பூவையர் கூந்தலிலே இந்தப் பூ கூத்தாடாது. பூவென்ன, அவர்களின் கூந்தலில் எண்ணெய் பட்டே எண்ணற்ற நாட்களாகி யிருக்கும்! உதிரத்தை இறைத்து மதுரமான கனிகள் உண்டாக்குகிறார்கள் அவர்கள். ஆனால் அதன் சுவை அநுபவிப்பது, மாளிகை சுந்தரர்கள்!......... இப்படி அவள் எண்ணம் எழுவதுண்டு. அதை நினைத்து அழுவதுண்டு! ஆனால், அன்று அந்த உழைப்பாளிகளின் தோற்றம் அவள் உள்ளத்தில் வாட்டத்தை உண்டாக்கவில்லை!

அன்னம் வழக்கமாக உட்காரும் வாய்க்காலின் கரையில் வந்தமர்ந்தாள். சிறிது நேரத்

திற்கெல்லாம் காலில் ஏதேதோ ஊர்வதுபோல் உணர்ந்தாள். புல் தரையிலிருந்து கிளம்பிய எறும்புகள் அவள் காலில் எங்கு பார்த்தாலும் அமைதியாக ஊர்ந்து கொண்டிருந்தன! திடீரென எழுந்து எறும்புகளைத் தட்டிவிட்டு, வாய்க்காலின் கரையிலேயே சிறிது தூரம் நடந்து, ஒரு மரத்தின் அடியில் அமர்ந்தாள.

வாய்க்காலில் வெள்ளம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அதை அவள் உற்றுப் பார்த்தாள. தன்னுடைய உள்ளத்திலும் அப்படித்தான் துக்க வெள்ளம் நிறைந்து ஓடுவதாக நினைத்தாள். உடனே அவள் வதனத்தில் புன்னகை அரும்பிற்று. அதே வாய்க்காலில் நேற்றும் அப்படித்தான் வெள்ளம் நிறைந்து ஓடியது. அந்த வெள்ளத்தை, தன்னுடைய உள்ளத்தில் ஓடும் மகிழ்ச்சி வெள்ளமாக ஒப்பிட்டிருந்தாள். காரணம், நேற்று, அவளுடைய சிநேகிதி ஒருத்தியிடமிருந்து, ஐம்பது ரூபாய் மணியார்டர் வந்திருந்தது பரிசாக! மகிழ்ச்சி வெள்ளமாக நேற்று இருந்தது. இன்று துக்க வெள்ளமாகி விட்டது!

ஃ ஃ ஃ

அன்று மாலை ஐந்துமணி இருக்கும். பள்ளிவழக்கமாக நான்கு மணிக்கெல்லாம் முடிந்துவிடும். அந்தப் பள்ளியின் ஆண்டுவிழா அண்மையில் நடக்க இருந்தது. அதில், சில அபிநயப் பாட்டுக்களை, சில மாணவச்சிறுமிகளைக்கொண்டு பாடச் சொல்வது என்று ஏற்பாடாகி இருந்தது. அன்னத்திடம் அப்பொறுப்பைத் தலைமை ஆசிரியர் ஒப்புவித்திருந்தார். பள்ளி நான்கு மணிக்கு முடிந்தது. குறிப்பிட்ட நான்கு சிறுமிகளைத் தன் வகுப்பில் சில பாட்டுக்களைச் சொல்லும்படி, பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தாள் அன்னம். தலைமை ஆசிரியரும் அன்னத்தின் வகுப்பில் வந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். மணி ஐந்தடித்தது. அன்று அத்துடன் பயிற்சியை முடித்துக் கொண்டு, சிறுமிகளை அவள் அனுப்பிவிட்டாள். பள்ளியில் அப்பொழுது, தலைமை ஆசிரியர், அன்னம இருவர் மட்டுமே இருந்தனர். அன்னம் தலைமை ஆசிரியரிடம் விடைபெற்றுக்கொண்டு வீடுபோக முயற்சித்தாள். ஆசிரியர் பேச்சை வளர்த்திக் கொண்டே இருந்தார். அன்னத்திற்கு, அவர் பேசிக் கொண்டிருக்கும போதே, நடுவில் முடித்துக் கொண்டு போவது அவ்வளவு மரியாதையாகத் தோன்றவில்லை. பேச்சு எங்கெங்கோ சென்று, கடைசியில், அன்னத்தின் புகழ்ச்சிச் சிந்தாகவே வளர்ந்தது.

"வீட்டில் வேலையிருக்கிறது. நான்...வ-ரு-கி-றே-ன்!" என்று அன்னம் ஆரம்பித்தாள்.

"உங்கள் பாட்டு ரொம்ப இனிமையாய் இருக்கிறது. உங்களுக்கு நல்ல குரல்......" ஆசிரியர் அஸ்திவாரம் போட்டார்.

"சின்னவயதிலிருந்தே நான் பாடுவேன். அதனால்தான் அப்படி இருக்கிறது. நான்........"

"என்ன அதற்குள் அவசரம்?......அன்னம்!...நீங்கள் கட்டியிருக்கும் 'பச்சைக்கலர் சாரிக்கும்' உங்கள் சிவப்பு உடலுக்கும் பொருத்தமாய் இருக்கிறது"

"வருத்தப் படுகிறேன் உங்கள் விபரீதப் பேச்சுக்கு......"

"விபரீதமா? "

அன்னத்தின் மனதில் பயம் புகுந்தது. அதை அவள் மறைத்துக் கொண்டாள். அவள் இமைகள் படபட வென்று அடித்துக் கொண்டன!

"ஆமாம்! உங்கள் எண்ணம் எனக்குப் புரிகிறது......"

"மல்லிகை மலர்ந்துவிட்டது. மணத்தை எதிர்பார்க்கலாம்!"

"தள்ளிவைத்துப் பேசுங்கள் நாக்கை. கொள்ளிக் கட்டையைக் கொண்டு அரிப்பை நீக்க முயற்சிவேண்டாம்!"

"அன்னம்...................."

"உங்கள் எண்ணம் செல்லாது!"

"கொல்லுகிறாயே உன் அழகால். நான் சொல்வதைக்கேள ...."ஆசிரியருக்கு அதற்கு மேல் பொறுக்கமுடியவில்லை. இப்படிச் சொல்லிக் கொண்டே அன்னத்தின் கையை அவர் தொட்டுவிட்டார். அவர் விழியில் ஏக்கம் வழிந்தது, பெருமூச்சில் நெருப்பு கலந்திருந்தது: வாய் வரண்டுவிட்டது; மார்பு அடித்துக் கொண்டது; பயத்தால்!...... அன்னம் அவர் கையை உதறித்தள்ளிவிட்டு விடுவிடு என்று வீட்டிற்குக் கூடப்போகாது வழக்கமாக மாலையில் உட்காரும வாய்க்காலின் கரைக்கு வந்து விட்டாள். அரை மணிக்கு முன்பு நடந்த இந்த நிகழ்ச்சி அவள் சிந்தனையில் குதித்து மறைந்தது;

∴ ∴ ∴

கப்பல் உடைந்து துயரப்பட்டு, பிறகோர் கட்டையைக் கண்டு களிப்படைந்து, அதைப் பிடித்துக்கொண்டு நீந்திவரும் போது, அந்தக் கட்டையே, முதலையாக மாறிவிட்டால் அவன் மனம் எப்படி இருக்கும்? அதுபோல் இருந்தது, அவள் மனம்!

அவள் காலில் ஒரு கட்டெறும்பு ஊர்ந்தது. அதைப் பிடித்து, வாய்க்கால் வெள்ளத்தில் விட்டெறிந்தாள். அது துடித்துக் கொண்டே நீரில் அடித்துக்கொண்டு சென்றது. தன்னுடைய மனமும், அந்த எறுமபைப்போல்தான் துடிப்பதாக உணர்ந்தாள்! அவள் அந்த எறும்பைப் பார்த்தாள். கரையிலிருந்த ஒரு மாத்திலிருந்து, காய்ந்த சருகொன்று தண்ணீரில் அடித்துக் கொண்டு செல்லும் எறும்பிற்கு முன்னே விழுந்தது. எறும்பு சருகில் ஏறிற்று. சருகு கரை ஓரமாக வந்ததும் எறும்பு கரையில் ஏறிக் கொண்டது! ....எறும்பு கரை ஏறிவிட்டது! தான், அந்த ஆசிரியர் காம வெள்ளத்திலே தவறி விழுந்திருந்தால் கரையேற முடியுமா? இதை நினைக்கும்

போகே, நடுங்கிவிட்டாள். இன்னொரு நிகழ்ச்சி அவள் சிநேகிதி சண்பகம் வீட்டில் நடந்தது. அது அவள் கருத்தில் குதித்தது!

ஃ ஃ ஃ

"சண்பகம் இல்லையா?..." அன்னம், சண்பகம் வீட்டுமாடியில், எப்போதும் அவள் செல்வதுபோல் சென்றதும், சண்பகம் அங்கே இல்லாதிருக்கக் கண்டு, அங்கே இருந்த சண்பகத்தின் அண்ணனைக் கேட்டாள்.

"வந்துவிடுவாள். இந்த நாற்காலியில் உட்காருங்கள்" என்றான் அவன்.

"வேண்டாம்...பிறகோர் சமயம் வருகிறேன்."

"அடுத்த வீட்டுக்குத்தான் போயிருக்கிறாள். இப்பொழுது வந்து விடுவாள். இப்படி உட்காருங்கள்."

அன்னத்திற்கு அந்த 'உபசரிப்பை' மறுக்க முடியவில்லை. நாற்காலியில் உட்கார்ந்தாள். அவன் இவளையே இமைகொட்டாது பார்க்க ஆரம்பித்து விட்டான். இவளோ, தலையைக் கீழே தொங்க விட்டுக்கொண்டு தன் பாதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அமைதியைக் கிழித்தான்.

"என்ன வாங்குவதற்கு வந்தீர்கள்?"—அவன்.

"'கண்ணீர்' என்ற கதைப் புத்தகம்!"—அவள்.

"இன்னும் அதைப் படித்தில்லையா நீங்கள்?"

"முன்னம் ஒரு தடவை படித்தது. இன்னொருமுறை படிக்கலாமென்று........."

"ஆமாம்! படிக்கப் படிக்க அலுப்பு ஏற்படாத கதைதான் அது. கண்ணீர்! விதவைகளின் கன்னத்தில் புரளும் கண்ணீர், தரித்திரனின் விழிகள் உகுக்கும் கண்ணீர், அறிஞன் கண்கள் சொரியும் கண்ணீர், பண்ணையாரின் கண்ணில் முட்டும் கண்ணீர்.........ஒவ்வொன்றும் பேசுவதாக ஆசிரியர் கற்பனை செய்திருப்பது எவ்வளவு அழகு நடையில் அமைந்திருக்கிறது பார்த்தீர்களா?"

"வெல்ல நடையுடன் நல்ல பொருளும் இணைந்திருக்கிறது. இல்லாவிட்டால்..............."

"பலனில்லை! பொருளில்லா நடை, சரக்கில்லாக் கடை, வீரமில்லாப் படைதான்......"

"அழகாய் இருக்கிறது உங்கள் பேச்சு!"

"தங்கள் கண்வீச்சை விடவா?"

"இதென்ன........."

"அன்னம்!......உன் அழகு என் உள்ளத்தைப் புண்ணாக்குகிறதே. இன்னும் இதைத் தெரிந்து கொள்ளாததுபோல்......" அவன் இப்படிச் சொல்லிக்கொண்டே, அன்னத்தின் அருகில் விரைந்து அவளை அணைத்தான். அன்னம் திமிர முயன்றாள்; முடியவில்லை!

அவள் கண்களில் பரிதாபம் படிந்திருந்தது; பச்சைக் குழந்தை தன் இச்சைக்குகந்த தாய் தன்னை அடிக்க வரும்போது பார்ப்பதுபோல் அவனைப் பார்த்தாள்!...மாடிப் படிகளில் யாரோ ஏறிவரும் 'தட தட' ஒலி கேட்டது.

கம்பங்கொல்லையில் பாய்ந்த சிட்டு, கதிரில் அலகை வைக்கும்போது, பரணிலிருந்து தகரச் சத்தம் கேட்டால் அதன் சித்தம் எப்படி இருக்கும்? அது போல் ஆனது அவள் மனம்.

சண்பகம்-அன்னம்தேடிவந்த தோழி, வந்த சத்தமே அது. அதைக் கேட்டதும், அவன், அன்னத்தை விட்டுவிட்டான். பாம்பின் வாய்க்குள் சிக்கிய தவளையைப் பாம்பே உடனே கக்கிவிட்டால், தவளை ஆனந்தத்தால் ஆடாதா? அன்னம், நல்ல நேரத்தில் அங்கு வந்த சண்பகத்தை மனதிற்குள் வாழ்த்தினள்!

இந்த நிகழ்ச்சி வாய்க்காலின் கரையில் மரத்தடியில் அமர்ந்திருந்த அன்னத்தின் கருத்தில் சில நிமிஷங்கள் நின்று மறைந்தது. கதிரவனும் நன்கு மறைந்து விட்டான். இருள் தன் இதழ் திறந்தது. அன்னம் வீட்டிற்கு வந்தாள்.

மேசையில் விளக்கேற்றி, நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு அதில் அமர்ந்து, மேசையில் இருந்த ஒரு புதுப்புத்தகத்தை எடுத்தாள். 'கட்டுக்கதைகள்'என்று மேலே கொட்டை எழுத்தில் இருந்தது. முதல் கதையைப் படிக்க ஆரம்பித்தாள்.

* * *

கழுகும் கலாபமயிலும்

கார்மேகங்கள் விண்ணில் விரைந்து கொண்டிருந்தன

கலாபமயிலொன்று கர்வக் களிப்புடன் தனியே தன் தோகையை விரித்து ஆடிக் கொண்டிருந்தது.

ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த ஒரு கழுகு, மயிலின் இந்த ஆட்டத்தைப் பார்த்தது. அருகே சென்று அதன் ஆட்டத்தைச் சுவைக்க எண்ணி, கீழே பறந்து வந்து மயில் ஆடிக்கொண்டிருந்ததற்கு எதிரே இருந்த ஒரு பட்டுப் போன மரத்தின், தாழ்ந்த கிளையில் அமர்ந்து கண்ணைக் கொட்டிக் கொட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

மயில், எதிரே உட்கார்ந்த கழுகைக் கவனிக்காதது போல், பார்வையைத் திருப்பிக் கொண்டு இன்னும் லாவண்யத்துடன் ஆடிற்று.

கழுகை, பொறுமை கப்பிக் கொண்டது; சில நிமிஷங்களில் பொறுமைபோய். வருத்தம் அதை வளைத்துக்கொண்டது. கழுகின் கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்தது!

மயில் அதை ஜாடையாகப் பார்த்தது; மட்டற்ற களிப்பும் கர்வமும் கொண்டது; இன்னும் சிங்காரமாகவே சிரித்துக் கொண்டு ஆடிற்று!

தன்னால் இதுபோல் ஆட முடியவில்லையே; ஆடினாலும் எல்லோரும் சிரிப்பார்களே என்று கழுகு எண்ணிற்று.

இப்பொழுது கழுகின் கண்ணி லிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தது!

மயிலுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. போனால் போகிறது. கழுகுடன் இரண்டு வார்த்தை பேசுவோம். பேசினால் அதன் துக்கத்தை இன்னும் கிளறி விடலாம் என்று நினைத்தது. மயில் பேச்சை ஆரம்பித்தது.

"என்னடா பார்க்கிறாய்!" மயில் கேட்டது.

"உன்னுடைய ஆட்டத்தைப் பார்க்கிறேன்!" கழுகு பதில் சொல்லிற்று.

"ஆட்டமா?...கலை உணர்ச்சியில்லாத கர்நாடகமே! நடனம் என்று சொல்"

"ஆமாம்! உன்னுடைய நடனத்தைப் பார்க்கிறேன்."

"படமெடுத்தாடும் பாம்பைப் பிரமாதமாக ஆடுகிறது என்கிறார்களே, என் நடனத்தின் கால் தூசி பெறுமா அது?"

"மனிதர்கள் தானே சொல்கிறார்கள்? அவர்களுக்கு எதுவும் பிடிக்கும். பெரிய மனிதர்கள் சிலர் 'ஆஹா!பலே'என்று எதையாவது புகழ்ந்தால், எல்லாரும் அப்படியே 'பலே' கொட்டுவார்கள். அவர்கள் கிடக்கிறார்கள். எதையும் அழகு என்பார்கள்!! தாஜ் மஹால் அழகு சொரிகிறது, உண்மை! அதைப் பார்க்கச் செல்லுகிறார்கள். 'ஹம்பி'— பாழடைந்த விஜய நகரம்— இடிந்த கட்டடங்கள் இருக்கின்றன. அதையும்தான் பார்க்கச் செல்லுகிறார்கள். அவர்கள் சுவையுணர்ச்சியைக் குப்பையிலே போடு. நான் சொல்கிறேன், மயிலே, உன்னுடைய ஒயில்தான் என்னே!"

"வளைந்த மூக்கு வக்கிரகமே! என்னடா கிண்டலா செய்கிறாய்......"

"அபசாரம்!......ஒப்பற்ற மயிலே! நீ தப்பாக எண்ணி விட்டாய்! உண்மையில் நீ மிக்க அழகுள்ளவன் தான்."

"மிக்க அழகா?......பறவை வர்க்கத்தில் என்னைவிட மதிப்புள்ளவன், அழகுள்ளவன். கிடையவே கிடையாது. பார் வேந்தன், பைந்தமிழ் மன்னன், பட்டாடை பரிசளித்தது யாருக்குத் தெரியுமா? மயில் இனத்துக்கு! ஞாபகமிருக்கட்டும். கவிவாணர்களின் கருத்தில், காதலியிடம் பேசும் காதலனின் நாவில், ஓவியத்தில், காவியத்தில் இடம் எனக்குண்டு. மடக்கழுகே என்னுடைய மேனியைப் பாரடா. எத்தனை வர்ணங்கள் பார். எண்ண முடியுமா உன்னால்? என் கவின் கழுத்தைப் பார், பிணம் பிடுங்கியே! எவ்வளவு நீளம்! உன் கழுத்துப் இருக்கிறதே! அழகின ஆலயமடா நான். ...." மயில் நல்ல வாய்ப்பு பேச்சில் கிடைத்ததென்று கருதி, மடை திறந்து ஓடும் வெள்ளம் போல் தன் அழகின் பிரதாபத்தைப் பேச்சில் பின்னி ஓடவிட்டது.

"மயிலுக்குத்தான் எவ்வளவு அழகு!......என்னுடைய விகாரமாய் வளைந்த மூக்கும், ஆபாச

மான உடலும், அருவருப்பான கண்களும் ...." கழுகிற்கு அதற்குமேல் எண்ண முடியவில்லை. அதன் கண்கள் நயாகரா நீர்வீழ்ச்சியாயின.

மயிலுக்கு ஆனந்தம் கரைபுரண்டு ஓடிற்று. தன்னுடைய இறக்கைகளை விரிப்பதும், கண்ணால் ஒரு முறை பார்ப்பதும், மடக்குவதுமாக இருந்தது!

சரசரவென்று சத்தம் கேட்டது. மயிலைச்சுற்றி ஒரு வலை மூடிக்கொண்டது. அடர்ந்திருந்த தழைகளை நீக்கி, கலகலவென்று சிரித்துக்கொண்டே, ஒரு வேடன் கையில் பிடித்திருந்த கயிற்றுடன் வந்தான். மயிலை வலையுடன் சேர்த்துப் பிடித்துக்கொண்டான். வலையின் துவாரம் வழியிலே மயிலின் கண்கள் தெரிந்தன. கழுகு அதைப் பார்த்தது. மயிலின் கண்கள் குளமாய் இருந்தன!

"கழுகண்ணனே! உனக்கிருப்பது போல் அழகற்ற உடல் எனக்கிருக்கக்கூடாதா? அப்படி இருந்தால் வேடன், என் மீது வலை வீசமாட்டானே!" மயிலின் கண்ணிலிருந்து வழியும் கண்ணீர் இதுபோல் சொல்லுவதாக, கழுகு உணர்ந்தது. இறக்கைகளை அடித்துக்கொண்டே, கழுகு ஆனந்தமாய்ப் பறந்து சென்றது!


* * *

அன்னம் கதையைப் படித்து முடித்தாள். புத்தகத்தை மூடினாள். மேலட்டையில், ஒரு கிளி ஓர் இரும்புக் கூண்டில் அடைக்கப்பட்டிருக்கும் சித்திரமொன்று அழகாய்த் தீட்டப்பட்டிருந்தது. அன்னம் அதை உற்றுப்பார்த்தாள். கூண்டுக்கிளி பேசுவது போல் இருந்தது.

"அழகி அன்னமே! கண்ணில் ஏன் உனக்கு நீர்? பைத்தியம் நீ! என்னைப்பார்! இரும்பு வலையில் இருக்கிறேன். காரணம்; நான் அழகுள்ளவள்; அதனால் தான்! காக்கையை வலை வீசிப் பிடிக்கிறார்களா? இல்லை? ஏன்? அழகில்லை அதனிடம். அன்னமே! உன் மீது வலை வீசுகிறார்கள். ஏன்? அழகி நீ! அதனால் தான். அழகு எங்கெங்கே இருக்கிறதோ. அங்கெல்லாம் வலை வீசப்படும். ஆமாம்! ஆசை வலை அலைந்து கொண்டிருக்கிறது, அழகைப் பிடிக்க என்ன செய்வது? ஜாக்கிரதையாய் இல்லாததால் தான் நான் அகப்பட்டுக்கொண்டேன். அதனால் நீ...ஆம்!...விழிப்பாயிரு, வலை அலைகிறது!

பம்பாயில் தமிழர் கல்வி நல முன்னேற்றக்குழு

பம்பாய்-தாராவியில் வாழும் தமிழர்களுக்குக் கல்வி நல வசதிகள் இல்லையென்றே கூறலாம். தமிழ் நாட்டில் பிறந்தும உயர்சாதி என்ற மக்கள் பம்பாய் மாடுங்காவில் இருந்து கொண்டு சுயநலத்தோடு சுகவாழ்வில் வாழ்கின்றனர். நம்மவர் வாழும் தாராவியில் கல்வி நல முன்னேற்றத்திற்கான இம்முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம். தலைவர் எஸ் ரெத்தினம் அவர்கள். செயலாளர்கள் எஸ். பெரியசாமி, எ.பி. ஜெ. ஏசுதாஸ்; பொருளாளர் எஸ். தங்கையா நாடார், கமிட்டி உறுப்பினர்கள் ஒ. டி. ஐயாசாமி, கே. பி. பாலசுந்தரம, எஸ். எம். சுப்பையா, எஸ். பி. ஷண்முகம். ஜெ. செம்பிரம், ஜெ. வி. ஞானையா நீல், நாராயணப் பாண்டியன, எஸ். பி. சுப்பையா, பி. எஸ். கோவிந்தசாமி, ஆர். ஆறுமுகம் தாஸ், டி. எஸ். சிவகுருநாதன்.



மதம் அவசியமா?

ஏ. எம். இராமச்சந்திரன் செட்டியார்

இன்று சிவராத்திரி. சிவாலயங்களில் எல்லாம் பூஜைகள் நடக்கும். நூற்றுக்கணக்கான மக்கள் கோயிலுக்குச் சென்று வணங்குவார்கள். சைவர்கள் விடுகளில் நோன்பு இருப்பார்கள். எல்லாருடைய முகங்களும் சாந்தமாக இருக்கும். அன்பர்கள் நன்றாகக் குளித்துவிட்டுத் திருநீறு தரித்துக் கொண்டு தூய்மையாக விளங்குவார்கள். உணவும் தூய சைவ உணவாக இருக்கும். அன்பே சிவம் என்ற உணர்ச்சி அகத்தில் மட்டும் அன்றிப் புறத்திலும் தோன்றும். இவ்விதக் காட்சி விரும்பத்தக்க காட்சி அல்லவா!

ஆனால் நேற்று இரவு எதை நான் அனுபவித்தேன் என்று கூறட்டுமா? நடு நிசியிலிருந்து ஒரே இரைச்சல். என் விட்டிலிருந்து தெற்கே அரைக்கல் தொலைவில் ஒரு கிராமம் இருக்கிறது. அதில் அகமுடையார்கள் குடியிருக்கிறார்கள். அவர்கள் அம்மன் திருவிழா தொடங்கி விட்டார்கள். நடு இரவிலிருந்து விடியும் மட்டும் தப்பட்டை ஒலி என் காதுகளைத் துளைத்துவிட்டது. தூக்கம் சிறிதும் வரவில்லை. அங்காளியம்மன் பத்திரகாளியம்மன் திருவிழாக்கள் சிவராத்திரியிலும் அடுத்த நாள் அமாவாசையிலுமே நடைபெறும். ஊரார் எல்லாரும் காணிக்கை எடுத்துப் பூசை போடுவார்கள். அம்மன் மெரமணை நடக்கும். கரகமும் எடுப்பார்கள். நேற்று வரை ஆயிரத்தெட்டுக் குற்றங்கள் செய்தவன் மீதே ஆவேசம் வரும். காலையில் நெருப்பு வளர்த்துக் குண்டம் உண்டாக்கிக் குளித்து விட்டு நெருப்பு மிதிப்பார்கள். கால் கொப்பளிப்பது இல்லை. என்ன ஆச்சரியம். முடிவு என்ன? மறுநாள் அதே ஆள் ஆயிரத்தெட்டுப் பொய்கள் பேசுகிறான். இது மதமா?

சேலம் முதலிய இடங்களிலே சிவராத்திரியின் போது அங்காளம்மன் விழா நடக்கிறது. பூசாரி பைரவ வேடம் பூண்டு மண்டை ஓடுகளை மென்று கொண்டு மயானம் செல்லுகிறான். அங்கே சுடுகாட்டுச் சாம்பலைக் குவித்து அதன் பேரில் சாதம் காய்கறிகள் முதலியவற்றைப் படைத்துப் பூஜை போட்டு எலும்புத் துண்டுகளுடன் கலந்து பரிமாறுவார்கள். பொதுப் பாமர மக்கள் அதை வாங்கி உண்பார்கள். உண்ட பெண்களுக்குக் கர்ப்பம் உண்டாகுமாம். அன்று மாலை பூசாரி பெண் வேடம் பூண்டு ஆட்டு இரத்தம் பூசிக்கொண்டு குடலை மாலை சாத்தி வாயில் குடலைக் கவ்விக்

கொண்டு ஊர்வலம் செல்வான். இந்தக் காட்சிகளைக் காணப் பல்லாயிரக் கணக்கான மக்கள் செல்வதுண்டு. இது எப்படிப்பட்ட அருவருப்பான காட்சி! இவ்விரண்டு காட்சிகளும் மதத்தின் பேரால் நடக்கின்றன.

இவைகள் மதத்தின் செயல்கள் என்றால் அம்மதம் நமக்கு வேண்டாம். சிவராத்திரிக்கும் இந்த விபரீத விழாக்களுக்கும் என்ன தொடர்போ தெரியவில்லை. ஆனால் பாமர மக்கள் இவைகளில் நம்பிக்கை வைப்பதுமன்றி அச்செயல்கள் மதச் சார்பானதென்றும் எண்ணுகிறார்கள். நாகரிகம் பெற்றதாக எண்ணிக்கொண்டிருக்கும் நம் நாட்டில் இந்த இருபதாம் நூற்றாண்டில் இவைகள் நடந்தால், மதம் வேண்டுமா என்ற கேள்வி ஏன் தோன்றாது? முன் காலத்தில் கேட்கப்படாத கேள்வியை இப்போது கேட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது. அதற்கு விடையும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

மதம் என்றால் கொள்கை. அது கொள்கையோடு மட்டும் இருந்ததில்லை. அறிவு படைத்தவர்கள் கொள்கை ஒன்றையே கருதி வாழ்வார்கள். அறிவு குறைந்த பாமரர்களுக்கு அக் கொள்கைகளை உட்புகுத்துவதற்குச் சில சடங்குகள் வேண்டியிருந்தன. அவ்வாறு ஏற்பட்ட அச்சடங்குகள் நாளாவட்டத்தில் ஆபாசத்தில் இறங்கி விட்டன. பாமரர்களோ கொள்கைகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இன்றிச் சடங்குகளையே கைக்கொள்ளத் தொடங்குவார்கள். இறுதியில் அவர்களுக்கு மதம் என்றுமே சடங்கு என்ற பொருள் பெற்று விடும். யாகம் செய்து வந்த ஒரு முனிவர் தான் வளர்த்த பூனை யாக நெய்யை உண்ணாமல் இருப்பதற்காக அதனை ஒரு கட்டுத் தறிக்குக் கட்டிவைத்து யாகம செய்ததைக் கண்டிருந்த அம்முனியின் மாணாக்கர்கள் அவர் இறந்த பிறகு பூனையைத் தறிக்குக் கட்டுவதும் யாகத்தினுடைய ஒரு பகுதி என்று செய்து வந்ததில் பின்னர் வந்த பரம்பரையினர் பூனையைக் கட்டுவதே யாகம் என்று கொண்டனராம். இதை ஒத்துத்தான் தற்காலத்தில் பாமர மக்கள் திருவிழாக்களையும், சடங்குகளையுமே மதம் என்று எண்ணத் தலைப்பட்டு விட்டனர். இந்த உணர்ச்சி போய் அடிப்படையான கொள்கைகளை அறிந்து போற்றுவதுதான் சமயப் பற்று ஆகும். சடங்குகளும் விழாக்களுமே மதம் என்று இருந்தால் அம்மதம் நமக்கு வேண்டியதில்லை.

மதம் என்றதற்குக் கொள்கை என்று கொள்ளுமிடத்து, எல்லாக் கொள்கைகளும் மதம் ஆகுமா என்ற கேள்வி எழும்பும். எல்லாக் கொள்கைகளும் மதம் ஆகாது சில குறிப்பிட்ட கொள்கைகளே மதம் என்பதில் அடங்கும். உலகில் உயிர் உள்ளவை உயிர் இல்லாதவை என்ற இரு பிரிவுகள் உண்டு. இவற்றில் உயிர் அறிவுள்ளது; உயிரற்றது அறிவு இல்லாதது. உயிர், உயிரற்றது (இதனை உடல் என்று கூறலாம்) இவ்விரண்டு பொருள்களின் தன்மை என்ன; இத் தன்மைகளைச் செய்விக்

இறைவன் ஒருவன் உண்டா; அவனுடைய தன்மை என்ன; அவனை உயிரும் உடலும் அறியுமா; அறியாமல் தடுப்பது எது; அந்தத் தடையை நீக்கி அறியும்படி செய்ய முடியுமா; அறிந்தால் அந்த அறிவு எப்படிப்பட்டது; என்ற கேள்விகளை ஒவ்வொரு அறிவு படைத்தவனும் கேட்கக் கூடும். அக்கேள்விகளுக்கு விடைகளாக உள்ள கொள்கைகளே மதம் அல்லது சமயம் எனப்படும். இந்தப் பொருளை விடுத்துப் பழக்க வழக்கங்கள் ஆகப்பல நாடுகளில் தோன்றியிருக்கும் சடங்குகளை மதம் என்பதில் சேர்த்துக் கூறுவது அறிவின்மை ஆகும். ஒரு வகுப்பார் மற்ற வகுப்பாரை ஏனம் செய்வதற்காக அச் சடங்குகளை மதம் என்று கூறுவது அறியாமை மட்டும் அல்ல அழுக்காறு என்றும் கூற வேண்டும்.

உலகத்திலே பண்டைக் காலம் முதற்கொண்டே வெவ்வேறு தொகுதியினர் மேலே சொன்ன கேள்விகளுக்கு விடைகளை ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை எழுதியும் வைத்துள்ளார்கள். சில தொகுதியினர் மேற்போக்காக ஆராய்ந்திருக்கின்றனர். சிலர் நுட்பமாக ஆராய்ந்துள்ளனர். ஆகவே இவைகள் படிப்படியாக இருப்பவைகளாகத் தோன்றும். ஆராய்ச்சி முறை ஒன்றாக இருக்கலாம். ஆராய்ச்சிகள் அறிவு கடந்த இடத்திலிருந்து வந்தது என்றும் கூறலாம். இவ்வாராய்ச்சிகள் என்ற கொள்கைகள் சமயம் என்று பெயர் பெற்றால் அவைகளைக் கூறும் நூல்கள் திருமறைகள் என்று எங்கும் வழங்கி வரும். அவைகளை மக்கள் புனித நூல்களாக உலகில் போற்றுகிறார்கள்.

இனிப் படிப்படியாகவோ சிறிது மாறுபட்டனவாகவோ சில கொள்கைகள் இருந்தால் அந்த மாறுபாடுகளைக் கண்டு சிலபேர் அழுக்காறு அடைகிறார்கள். வெகுவாகச் சமயக் கொள்கைகளைப் பிறருக்குச் சொல்லி அதனால் பிழைக்கும் தொழிலைக் கொண்டவர்களே இவ்வித அழுக்காறு அடைவதுண்டு. இதனால் உலகத்தில் கூற ஒண்ணாத கொடுமைகள் நடந்திருக்கின்றன. சிறை, கொடுந்தண்டனை, கொலை, கொள்ளை, போர் முதலிய கொடிய செயல்கள் இந்த அழுக்காற்றினால் உலகம் எங்கும் நடந்திருக்கின்றன. இதனால் மதத்தைப் புறக்கணிப்பதா என்ற கேள்வி பிறக்கும். அரசியலில் கொடுமைகள், போர்கள், படுகொலைகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் அரசியலையே அழித்து விடலாமா என்பதை ஒக்கும் அக்கேள்வி. இக்காலத்தில் மதம் வேணடாம் என்கிறவர்கள் இந்தச் சரித வரலாற்றுக் கொடுமைகளையே எடுத்தாளுவது வழக்கம். மதத்தைப் புறக்கணிப்பதற்கு அது ஒரு சிறந்த காரணம் ஆகாது.

இனி மதம் யாருக்கு வேண்டும் என்றும் கேட்பார்கள். உலகில் உயிருள்ளவை உயிரற்றவை என்ற இரண்டு பிரிவுகள் உண்டு என்றோம். உயிர் அற்வைகளுக்கோ மதம் வேண்டியதில்லை. உயிர் உள்ளவைகளிலே அமீபா முதல் கொண்டு திமிங்கிலம் இறுதியாக உள்ள உயிர்

களிலே மனிதன் ஒருவனைத் தவிர ஏனைய உயிர்களுக்கும் பகுத்தறிவு வெகுவாய்க் கிடையாது. அவைகள் உண்பது, உறங்குவது, பெருக்குவது இம் மூன்றைத் தவிர வேறு கவலை கொள்ளா. ஆகவே அவைகளுக்கும் மதம் வேண்டியதில்லை. ஆறறிவு பெற்ற மனிதன் ஒருவனுக்கே மதம் உரித்தாயது. அவனே தன் முன்னில் பின்னிலைகளைபபற்றிச் சிந்திக்கும் ஆற்றலும நினைவும் உள்ளவன். தனக்கு ஒரு பிந்திய நிலை உண்டு என்று மனிதன் தோன்றிய நாள் முதல் கொண்டே எண்ணினான் என்பது பண்டை இயல் வரலாற்றின் முடிவு. பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி வாழ்ந்த மனிதனும் தனக்குப் பிந்திய நிலை உண்டு என்ற கருத்தினால் சிறந்த உடலோடு அருமையான பொருள்களை வைக்கப்பட்டுப் புதைக்கப்பட்டான். ஆகவே மனிதன் ஒருவன் தான் சமய ஞானத்திற்கு உரிமை கொண்டவன் ஆகிறான்.

சில கொள்கையினர் உடலோடு உயிரும அழிந்து விடுகிறது. ஆகவே பிந்திய வாழ்க்கை உயிருக்கு இல்லை எனபர். அவர்கள் உலகில் இருக்கையில் இன்பம் அனுபவிக்க வேண்டியது என்பர். அவர்களில் சிலர் எப்படிப்பட்ட வாழ்க்கையான போதிலும் இனப வாழ்க்கை இருந்தால் போதும் என்பர். ஏனையோரில் பெரும்பான்மையான பேர் சமூக நிலையில் இன்ப வாழ்க்கை பெறுதற்கு வேண்டிய சட்டதிட்டங்களை வகுத்து இன்பம் பெறவேண்டும் என்பர். இவர்களுக்கு நீதி, நல்வழி என்பவைகள் உண்டு. அவைகளின்படி நடந்தால் மக்களுக்குப் பெரும்பான்மையான நன்மை கிடைக்கும்; அவை அல்லாமல் பிற்காலத்தைப்பற்றியாதொரு கவலையும் வேண்டியதில்லை என்பர். இப்படிப்பட்டவர்களுக்கு நீதி இருந்தால் போதும். சமயம் வேண்டியதில்லை.

உலகில் பெரும்பான்மையான பேருக்கு, உயிருக்கோ, இறந்த பின் வாழ்க்கை உண்டு என்பதே கொள்கை. அவர்கள் சமயத்தைப் போற்றிப் பின் வாழ்க்கைக்கு ஆகவேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளுவர். இவர்களிலும் இருவகுப்பார்கள் உண்டு. ஒரு வகுப்பார், மனிதனுக்கு ஒரே பிறப்பு உண்டு. இது நீங்கினால் இந்த வாழ்விற்குத் தக்கபடி நல்லுலகமோ தீய உலகமோ பினனால் உண்டு—என்

ஒருவர்:- (மற்றவரைப் பார்த்து) இப்பொழுது நாகசுரக்காரர் ஊதிய பாட்டின் பெயரென்ன?

மற்றவர்:- திருப்புகழ் சார்?

முதல்வர்:- அப்படியா? ரொம்ப நன்றாக இருக்கது சார். அப்படியே திருக்குறளையும் ஊதச் சொல்லுங்களேன்!

பது. ஆகவே இந்த வாழ்விலேயே கூடிய மட்டும் நற்செயல்களைச் செய்து தூய சமய வாழ்க்கை வாழவேண்டும் என்பர். இரண்டாவது வகுப்பார் உயிருக்குப் பல பிறவிகள் உண்டு. இந்தப் பிறவியில் செய்யும் செயலுக்கு ஏற்ற பிறவி அடுத்த பிறவியில் கிடைக்கும். பல பிறவிகளிலும் நன்மை செய்து இறுதியில் ஈடேற்றம் அடையலாம் என்பதாம். இவர்களும் தூய வாழ்வினை விரும்பிச் சமயவாழ்க்கையை இச்சிப்பார்கள். இந்திய நாட்டுச் சமயத்தார்கள் எல்லாரும் இந்த வகுப்பில் சேர்ந்தவர்கள். இந்த இரண்டு வகுப்பார்களும் சமயம் வேண்டும் என்பவர்கள்.

இனி மனிதனுக்குச் சமயம் ஏன் வேண்டும், நீதி ஒன்று இருந்தால் போதாதா என்று கேட்கலாம். நீதி என்று இருந்தால் மட்டும் போதாது. மனிதனுடைய அறிவு குறைவு ஆனது. அவனுடைய அறிவுக்கு மீறியவை பல உண்டு. கலைஞர்களால் சமீப காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பல நுட்பச் சக்திகளும் கருவிகளும் அவன் அறிவின் குறைவைக் காட்டி இனிமேலும் பல உண்டு என்று நிரூபிக்கின்றன. ஆகவே சமய ஞானம் ஒன்றுண்டு என்று ஒரு நம்பிக்கை இருந்தால் அன்றி; மனிதன் எவனும் நீதி நெறி ஒன்றைப் பற்றிக்கொண்டு தூய்மையான வாழ்வில் இருக்க முடியாது. ஆகவே சமயம் வேண்டும்; அதன் வழியான வாழ்க்கையும் நமக்கு வேண்டும் என்று ஏற்படுவதில்லையா?

குறுகிய மனப்பான்மை என்ற பேச்சே அக்காலத்தில் கிடையாது. ஆனால் காலப் போக்கில் மதத்தின் பேரால் நமக்கு ஒருவித குறுகிய மனப்பான்மை ஏற்பட்டது. மனிதனை மனிதன் சந்திக்கக் கூடாது என்று தடுக்கும் மதம் என்ன மதம்? கடல் பிரயாணம் செய்வது பாவம் என்று மதத்தின் பெயரால் கூறப்பட்டது, சமுத்திர அன்னையை நம்பி அவளிடம் செல்லும் மனிதனைத் தடுக்கும் மதம் என்ன மதம்? தாயை, தந்தையை, சகோதரனை நம்பக் கூடாது என்றால் பிறகு ஒருவன் எப்படி வாழ்வது? எப்படி முன்னேறுவது?

— பண்டித நேரு

சமயச் சடங்குகள் சமய ஞானத்தை மறைத்து விடும் வகையில் விட்டு விடக்கூடாது. உண்மையானதும் தூய்மையானதுமான சமய ஞானத்திற்கு இன்றியமையாத சடங்குகளையும் நிலையங்களையுமே வைத்துக் கொண்டு ஏனையவற்றை ஒழித்து விடுதலே பகுத்தறிவுக்கு அழகு. இதற்கு உலகப் பெரியார்கள் வழிகாட்டிகளாக இருந்து தம் வாழ்க்கையிலே தூய்மையை எடுத்துக் காட்டியுள்ளார்கள். அவர்களைப் பின்பற்றி நடப்போமாக. இந்த வகையில் சமயம் நமக்கு வேண்டும் என்று தோன்றவில்லையா?

ஓடினன் ஓடினன்

தில்லை-வில்லாளன்

சொக்கன் கண்ணுடிக்கதவுகளை மெதுவாகத் தடவிப் பார்த்தான். பிறகு தன் கைத் தடியால் மெதுவாகத் தட்டினுன். கண்ணுடி நொறுங்கித் துகள் துகளாகச் சிதறியோடிற்று. சரசரவென அந்தத் தூள்கள் விழும் ஓசையைக் கேட்டு அவன் திடுக்கிட்டான். சிறிது நேரம் நிறுத்தி, பிறகு உடைத்தான். கண்ணுடிக்கதவுகள் காணமல் போய்விட்டன. பிறகு, இரும்புக்கம்பிகள எதிர்த்துநின்றன. அவன் தன் கையிலிருந்த சிசாவைச்சாய்த்தான். ஒரு சிறு இரும்புக்கம்பியினுல் அந்தத் திரவத்தை எடுத்துச் சாரைக்கம்பிகளில் பூசினுன். என்ன ஆச்சர்யம்! சிறிது நேரத்திலெல்லாம் அந்தத் திரவம் இரும்பை மென்று தின்றுவிட்டது. துரிதமாகத் துண்டுபட்ட இரும்புக் கம்பிகளை எடுத்து ஒரு மூலையில்போட்டான். சாளரத்தின் வழியாக உள்ளே இறங்கினுன்.

எங்கு பார்த்தாலும் கண்ணுடிக்கதவுகள், அவைகளுக்குள்ளே விதவிதமான வெள்ளியாலான விலைமதிப் பில்லாத பொருள்கள். திரும்பிய பக்கமெல்லாம் தங்க நகைகள், வைரத்தின் ஒளிவிச்சு—ஆம், அது ஒரு தங்கக் கடை.தான்! அதைத் தெரிந்துதானே அவன் உள்ளேவந்தான்!

சொக்கன் சுற்றும் முற்றும் பார்த்தான். அவன் கண்களில் ஆவல் வெறி நிரம்பித் தளும்பி வழிந்தது. அவன் கண்கள் தங்க ஒளிபட்டுத் தகதக வென ஒளிவிட்டன. அடுத்த கணத்தில் மலர்ந்த கண்கள் கூம்பின. சுற்றிலும் மீண்டும் ஒருமுறை தன் கண்களை விட்டுத் துழாவினுன். தான் வந்த சாளரத்தை வெறிக்க வெறிக்கப் பார்த்தான். ஒரு அடி எடுத்து வைத்தான். மறு அடி எடுத்து வைக்கமுடியவில்லை. பயம்—அவனைப் பிடித்துக் குலுக்கியது. அதனை உதறிதள்ளிவிட்டு மற்றொரு அடி எடுத்து வைத்தான். அவனது காலடியோசையையே அவனுல் கேட்க முடியவில்லை. ஒவ்வொரு அடி சத்தமும் அவனை நடுங்கவைத்தது. பின் காலைப் பெயர்த்து எடுக்கிற போது முற்படுகிற ஓசை அவன் இதயத்தில் தாக்கியதும் பாருங்கல் விழுந்தது போன்ற உணர்ச்சி—அப்படியே மலைத்து நின்ருன். கையிலிருந்த டார்ச்சை அடித்தான். ஒரே ஒளி மயம்! திடீரென்று விளக்கை நிறுத்தினுன். பிறகும் நடந்தான், மடியைத் தடவினுன். தீப்பெட்டியை

எடுத்து ஒரு குச்சியை எடுத்துக் கிழித்தான். மங்கலான ஒளியானாலும் அவனுக்கு அதுவும் மயக்கந்தருவதாகவே இருந்தது.

அவன் மீண்டும் கண்ணாடி அறைகளைப் பார்த்தான். திடுக்கென்று தூக்கிப் போட்டது. என்ன பயங்கரம் - ஆயிரம் துப்பறிவோர் வைத்தவிழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; கோட்டையை முற்றுகையிடும் படைவீரரைப் போல் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். எங்கு திரும்பினாலும் அந்தப் பொல்லாத மனிதர்களின் நச்சுப்பார்வை; கொட்டை விழி விழித்துக்கொண்டு நிற்கிறார்கள்! அவன் மூச்சு நின்று விடும் போலாகிவிட்டது. எரிந்து கொண்டிருந்த குச்சி நின்றது. உடனே ஒரு அதிர்ச்சி - அறுந்து போன வீணைக்கம்பி எழுப்பிடும் ஓசை போல அவன் இதயத்தில் அடிபீடத்திலிருந்து பிறிட்டுக் கொண்டு எழுந்தது. அது வெளியில் வரமுடியாமல் ஒரு முறை அவன் மார்பில் தாக்கி விம்மிப் புடைத்தது. திரும்பவும் ஒரு குச்சியைக் கொளுத்தினான். சுற்றிலும் பார்த்தான். வெள்ளிப் பண்டங்கள் கண்களைச் சிமிட்டிக் கிண்டல் செய்தன. பொன்னாபரணங்கள் கைகொட்டி நகைத்தன.

திடுதிடுவென மக்கள் ஓடிவந்தனர். கடையைத் திறந்து விட்டனர். சிவப்புத்தலைப்பாகைகள் ஏராளமாக்க குவிந்து விட்டன. பிடியுங்கள், அடியுங்கள், கட்டுங்கள் என்ற கூக்குரல்கள்! கட்டினார்கள், அடித்தார்கள். இழுத்துக் கொண்டு போய்ப் பூட்டி விட்டார்கள் சிறையில்-அவன் அப்படியெல்லாம் நினைத்தான். திரும்பினான். வேறொன்றுமில்லை, ஒரு எலி ஓடியது இங்கும் அங்கும்!

விசாரணை நாடகம், சிறைச்சாலை - இவை அவன் கண்களில் மாறி, மாறி வந்தன, உடனுக்குடன் கடலலைபோல எழுவதும், அழிவதுமாகவே இருந்தன.

அவன் இருப்புப் பெட்டிக் கருகில் வந்து விட்டான். அவனையும் அறியாமல் ஒரு வரண்ட சிரிப்பு அவனது தடித்த உதட்டில் துடித்து எழுந்தது!

“அடே, வேண்டாம் திருட்டு - பஞ்சமா பாதகங்களில் ஒன்று. அதனைச் செய்யாதே. பாவம் வந்து சேரும். நரகந்தான் கிடைக்கும்!”

யாரோ அதட்டினார்கள். அவன் திரும்பிப்பார்த்தான். அவன் எதிரில் ஒரு ஆள் கண்ணாடி அலமாரிக்குள் நின்றுகொண்டிருந்தான்.

“இல்லாதவன் இருப்பவனிடம்-அளவுக்கு மிஞ்சிச் சேமித்துள்ளவனிடம் - எடுக்கிறான், இதில் தவறென்ன?”

மறுபடியும் அவன் விழித்தான். இன்னொரு பெட்டியில் அவனைப போலவே ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான்.

சொக்கன் என்ன செய்வான்? பயம் - அவனை அழுத்திக் கொன்று விடும் போலிருந்தது. திருதிரு வென்று விழித்தான். மூச்சுவிடவும் முடிய

யில்லே. நாக்குவரண்டுவிட்டது. எச்சிலைக் கூட்டி விழுங்கினன். அவன் நெஞ்சுக் குழி எழுந்து அழுந்திற்று! அப்பப்பா, பயத்திற்கு எவ்வளவு வலு-உருவமே இல்லாத ஒரு உணர்ச்சி எவ்வளவு ஆட்டி வைக்கிறது மனிதனை! உணர்ச்சி நரம்புகளின் இணைப்பு வேலேயின் இயக்கம் தானே மனிதன்-சொக்கனுக்குத் துணிவிருந்தும், பயம் படையெடுக்காமல் தடுக்க முடியவில்லை.

அவன் மீண்டும் மீண்டும் அந்த இரண்டு வடிவங்களை உற்றுப்பார்த்தான், அவனுக்கு ஒரே வியப்பு - அந்த வடிவங்கள், அவனைப் போலவே இருந்தன. அவை இரண்டும் ஒன்ருேடு ஒன்று ஏதையெதையோபேசிக்கொண்டன. வாதம புரிந்தன. அவன் தலை சுழன்றது. அந்தக் கட்டிடமே சுழல்வது போன்றிருந்தது.

அந்தவடிவங்கள் இரண்டும்-

"திருடுவது தவறு"

"ஏன்?"

"பிறர் சொத்தை எடுப்பது பாபமல்லவா?'

"அவனுக்கு மட்டும் ஏன் அவ்வளவு சொத்து?"

"ஆண்டவனின் அருள்"

"ஆண்டவன் ஒருவனுக்கு நிறைந்த பொருளைத் தருவானேன்? இல்லாத ஒருவனை ஏற்படுத்துவது ஏன்?"

"அவனவன் முன் செய்த கர்மபலன்"

"எழுபிறவிக்கும் கருமபலன் கருவியானல், ஆதிபருவத்தில் ஒருவன் தீமை செய்யவும், பிறனெருவன் புண்ணியம் தேடவும் எழுதியது எவன்?"

"ஆண்டவனுகத் தானிருக்க வேண்டும்........"

"இழுத்து மழுப்ப வேண்டாம், அவனன்றித்தான் ஓரணுவும் அசையாதே!"

"பாவத்தின் விளைவு நரக வேதனை"

"வீண் வரட்டு வேதாந்தம் வேண்டாம். இதோபார் இவன் சொர்க்கத்திலா வாழ்கிருன்? இவன் வாழ்க்கையை நரகவாழ்க்கையைவிடக் கிழானதென்றுதான் சொல்ல முடியும்!"

"திருட்டுக்கு வக்காலத்து வாங்குகிருய்?"

"அடமரமண்டையே! சொக்கன திருடன்? வயிற்றுக்கு வழியில்லாததால், வயிற்றைச் சுமக்க முடியாமல் தின்று திணறிக்கொண்டு திண்டுமெத்தைகளில் புரண்டுகிடக்கிறுனே அவனிடம் கேட்டுக் கிடைக்காததால் எடுக்கிருன் இரவில் உரிமையுடன்! இதுவா திருட்டு?"

இந்தப் பொன் அங்காடி யாருடையது தெரியுமா? கருப்பண்ணன் செட்டியாருடையது! கருப்பண்ணன் செட்டியார் யார்? அவர் மட்டும் திருடால்

லவோ? சொக்கன் கையிலிருப்பது கன்னக்கோலும், கள்ளச் சாவிகளும் - கருப்பண்ணன் கையிலிருப்பது சாய்ந்த திராசும், தேய்ந்த படிக்கல்களும்! இவன் இரவில் யாருக்கும் தெரியாமல் வீட்டில் நுழைந்து எடுக்கிறான். செட்டியார் ஊரிலுள்ளோர் அனைவரையும் வரவழைத்துப் பட்டப்பகலில் அவர்களின் எதிரிலேயே திருடுகிறாரே - அதுபகற் கொள்ளையல்லவா? அவர் எடுப்பதற்குப் பெயர் வியாபாரத்தந்திரம். சொக்கன் எடுத்தால் அது மட்டும் திருட்டாமே! இது என்ன நியாயம்?

அப்படித் திருடித் திருடிச் செட்டியார் என்ன செய்தார்? இடிந்த கோயிலைப் புதுப்பித்தார். பாழடைந்த மண்டபத்தில், வெளவால் கூடுகளையும், ஆந்தைகளிருப்பிடங்களையும் மாற்றிப்பலவண்ணப் படங்கள் இட்டு வைத்தார். பெருச்சாளிகள்தோண்டிவைத்த குழிகளில் பணத்தை அள்ளிக் கொட்டினார்

சொக்கன் உழைப்பாளிதான் - நாளெல்லாம் உழைத்தும் நான்கணுக்கூலி தர மறுக்கிறார்கள்! என்ன செய்வான்? இதில் அவனுக்கு அடிக்கடி வயிற்றுவலி வேறு! மண்வெட்டியைத் தூக்கி யெறிந்தான், மண்சட்டி யொன்றை ஏந்தினான். தெருவுக்குத் தெரு வயிற்றைக் காட்டிக் கெஞ்சினான். கிடைத்ததைத் தின்றான், மீந்ததைத் தன் போன்ற மெலிந்த வாழ்வினருக்குத்தந்தான். அவனுக்கு இருக்கிறது தாராள சிந்தை - ஆனால் அவன் வரும்படியோ அரைச் சட்டிச் சோறு, இரண்டொரு வெங்காயம், பச்சை மிளகாய்கள்! அதிலேயும் வஞ்சகமில்லாமல் பிறருக்குக் கொடுத்துத் தான் வந்தான.

வெள்ளிக்கிழமைகளில் தருமம் செய்ய வேண்டுமாம்! ஆகவே, சொக்கன் வெள்ளி மாலை வந்ததும் கடைக்குக் கடைசென்று கையேந்துவான், பெருமையாக ஒரு பைசாவை எடுத்துக் கொடுப்பார்கள் அந்தத்தருமசிலர்கள்! அவர்களில் கருப்பண்ணன் செட்டியாரும் ஒருவர்தான். பைசா கொடுப்பதும் ஏழையின்பசிக்கல்ல, பிறரிடம் தருமசிலர் என்றுபட்டம் பெற, அவனுக்கு வியப்பாக இருந்தது. பசிக்கு ஒரு பைசா, ஆனால் பசியே எடுக்காத ஒரு பரமாத்மாவுக்கு இலட்சக் கணக்கிலே செலவிடுகிறார்! என்று எண்ணி எண்ணி ஏங்கினான். அவர் கடைக்குப் போனாலே அவனையும் அறியாமல் ஒருபாட்டைப் பாடுவான்.

இருக்குந் தெய்வங் கல்லடா
உலவுந் தெய்வம் செம்படா
பேசும் தெய்வம் நாமடா
வேறு தெய்வம் ஏதடா

இந்தப் பாட்டை அவனது முரட்டுத் தொண்டை கர்ண கடூரமான குரலில் இசைக்கும்! ஆனால் அதனைக் கேட்டு ரசிப்போர் எவர்?

நாள் மாறத் தொடங்கிற்று.

அவன் வயிற்றுக்கே வாட்டம் பிறந்து விட்டது. இரண்டு நாள் மூன்று நாள் சேர்ந்தாற் போலவே பட்டினி கிடக்க வேண்டி வந்தது. நடக்கவும் முடியவில்லை. உடல் சுருங்கத் தொடங்கி விட்டது. தாடியும்

மீசையும் அவனை அடியோடு மாற்றிவிட்டன. இப்பொழுதெல்லாம ஆவுடையப்பர் கோவிலின் வாசலிலேயே உட்கார்ந்து விடுவான். அங்கு ஒரு பட்டினிப் பட்டாளம் முற்றுகையிட்டிருக்கும். கண்ணில்லாதவர், காலொடிந்தவர், நோயுற்றோர், முதியோர் ...... என்று வழி நெடுக உட்கார்ந்து வகை வகையான வார்த்தைகளால் பிச்சை கேட்பார்கள். ஆலயம் தொழவரும் பக்தர்கள் அவர்களை எங்கே திரும்பிப் பார்க்கிறார்கள்!

சொக்கன் இந்த விசித்திர உலகில்தான் உலவினான். அவனுக்கு ஆத்திரம் அளவு மீறிவிட்டது! ஓடினான் வல்லப கணபதியிடம்! கண்டபடி கேட்டான். கேள்விமேல் கேள்விகளை வீசினான்.

"ஏ கந்தனுக்கு முன் பிறந்த கணபதியே! இதோ பார், உன் ஆலய வாயிற்படியில் ஆயிரமாயிரம் ஏழைப் பட்டாளம். இரவு பகலாய் "கண்ணில்லை கடவுளே! கடவுளே, காலணா கொடுங்கள்" காலில்லை தெய்வமே. கால்வயிற்றுக் கஞ்சி ஊற்று" "ஏலாத ஜென்மம தாயே" என்று கதறிடும் காட்சியை நீ பார்க்கவில்லையா? அவர்களைப் பார்த்துக் கொண்டுதானே பக்தர்கள் உன்னை நாடி வருகிறார்கள். அர்ச்சனைக்கு இரண்டு ரூபாய், அபிஷேகத்திற்கு ஐந்து ரூபாய் என்று தருகிறார்கள். காலொடிந்தவனுக்குக்காலணாக்கொடுக்காத பக்த சிரோன்மணிகள் காலொடிந்தின் வேண்டுதலாகக் காலடக்கம் வாங்கி வைக்கிறார்கள். இதனைப் பார்க்கச் சகிக்கிறதா? ஓகோ, உனக்குக் கண்கள் இல்லையோ!

"ஏழைகளாகிய எங்கள் குரல் ஒரு நாளும் கேட்பதில்லையோ! எப்படித்தான் கேட்கும்? மேள சத்தத்தையும், வாத்திய முழக்கத்தையும், அதிர் வேட்டுகளின் ஒலியையும் தாண்டி வருகிற அளவு கத்திடச் சக்தி இல்லையே எங்களுக்கு—வேட்டு சத்தத்தைக் கேட்டுக் கேட்டு உன் காது கெட்டுவிட்டதோ? அடடா, உனக்குத்தான் காது செவிடாயிற்றே!

"வருகிற பக்தர்களிடம் 'எனப்பா எனக்கு அபிஷேகம், அன்னப் படையல், என்னைக் கேலியா செய்கிறீர்கள்? உங்களுக்கு உலகத்தைப் படைத்துக்கொடுத்த எனக்குச் சோறு போட்டு வளர்க்கிறீர்களா? என் வயிற்றுக்கு வழி செய்து கொள்ளவும் முடியாத நான் உங்களுக்கு எப்படி வழி செய்வேன்? என் சக்தியில் நம்பிக்கையிருந்தால் அதோ கதறுகிறார்களே, ஏழைகள் அவர்களுக்குப் போடு, என் மண்டபத்தை நீ புதுப்பிக்க வேண்டாம். உலகமே என் உடலாக இருக்க, எனக்கு ஏன் தனி மண்டபம்? குந்தவும் கூரையின்றி இருமுகிறார்களே அவர்களுக்குக் குடிசைகள் கட்டிக்கொடு' என்று சொல்லக்கூடாதா—நீ தான் ஊமையாயிற்றே!"

என்று சொக்கன் பலபடக் கூவினான். பித்துக்கொண்டவன் போல் ஆடினான். ஆண்டவனையே கேள்விமேல் கேள்வி போட்டுச் சாடினான்! கடைசியில் இடியிடிப்பதுபோலச் சிரித்தான், சினத்தைச் சிரிப்பால் அடக்க முயன்றான்!

"தொந்தி பெருத்தவரே! இன்று இரவு 12-மணிக்கு உனக்கு மண்டபம் கட்டினாரே

மகானுபாவர், பத்திரசம் சொட்டும் திருவடியார் அவரது விட்டிலே சூறையிடப் போகிறேன். நீ வேண்டுமானல் முன்னரே தெரிவித்து விடு.

"ஆமாம், திருடப் போகிறேன! என்னைத் திருடன் என்று உலகு தூற்றட்டும், அக்கரையில்லை. ஆயிரமாயிரம் ஏழைகளின் வாழ்வைத் திருடிச் சேர்த்த பொருளை உன் பெயரைச் சொல்லி உனது தரகர் படை திருடித் தின்று கொழுத்தன. நீ மட்டும் என்ன, அந்தத் தரகர்களுக்குப் பயந்து ஏதோ கிடைத்ததைச் சுருட்டுகிருய்!

"அப்படித் திருடும்போது என்னைப் பிடித்துக்கொண்டால் மிக நல்லது. கூண்டிலே நின்று கூவுவேன். ஏ, நீதிபதியே நீ மட்டும் திருடவில்லையா? ஏ; வழக்கறிஞர்களே! உங்கள் வாழ்வே திருடர் வாழ்க்கை தானே என்று கேட்டு விட்டுச் சிறைக்குப் போவேன்! பாட்டாளி, பண்டாரமானேன். பண்டாரம் திருடனுகிருன்! திருடன் கைதியாகட்டும், திரும்பி வந்து கொலைகாரனுமாகிறேன்!

"பஞ்சமா பாதகம் என்ற பசப்பு வார்த்தைகளால் எங்களை எத்தனை நாட்களுக்குத் தான் அடக்கிவைத்திருக்கமுடியும்? அவர்கள் பட்டப் பகலில் திருடுகிருர்கள், அது திருட்டல்லவோ? நான் செய்யப்போவது மட்டும் திருட்டா? நான் எங்கள் வாழ்வைத் திருடி அதனை அடைத்து வைத்திருக்கிற இரும்புப் பெட்டியை உடைக்கப் போகிறேன். எவருக்கும் பயன்படாமல், எத்தர்கள் வயிற்றை மட்டும் நிரப்பிவிடும் அந்த வஞ்சகமான வெள்ளிப் பணக்குவியலை அள்ளி எறியப் போகிறேன்"

சொக்கன் ஓடினுன். இந்த வீரப் பேச்சைக் கேட்ட வல்லப கணபதி வாயடைத்துப் போனுர். திகைப்பால் சிலை போலானுர். வல்லப கணபதி கல்லானுர். வேறென்ன அவர் செய்வார்? பாவம், பரிதாபம்!

"நீண்ட கதையைப் பேசி என்ன செய்வது? திருட்டு திருட்டுத்தானே. வல்லப கணபதி சும்மா விடமாட்டார்."

"இந்நேரம் தாயைப் போல மனைவி வேண்டுமென்று தேடி அலைகிற குளக்கரைகளில் ஒன்றில் படுத்து நிம்மதியாகத்தூங்குவார். வேண்டுமானல் கனவில் போய்ச் சொல்லட்டுமே."

இப்படி வாதித்துக் கொண்டே இருந்தன அந்த உருவங்கள். சொக்கன் மண்டை கிர்ரென்று சுற்றியது. சுற்றிலும் உள்ள சுவர்களெல்லாம் அருகில் வருவது போன்றிருந்தது. அலமாரிகளெல்லாம் சுற்றின. தனது கரங்களால் தலையைத் தாங்கிக் கொண்டான். சிறிது நேரத்திற்குள் கண்களைத் துடைத்தான். அந்த வடிவங்களைப் பார்த்தான். அவைகள் மறைந்து விட்டன—அவ்வளவும் அவன் மனப் போராட்டம் தானே? இனித்துணிவு பிறந்து விட்டது! இரும்புப் பெட்டியைக் கள்ளச் சாவியால் திறந்தான். துண்டை விரித்தான், வேண்டிய மட்டும் அள்ளினுன். சுருட்டினுன். அந்தத் திருட்டுச் சொக்கன் ஓடினுன் ஓடினுன், ஓடிக்கொண்டே இருக்கிருன்! ●

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM,
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN

'பொன்னி' வெளியீடுகள்

திருவள்ளுவரும் திராவிடக்கொள்கையும் 0—2—0

திருக்குறள் முனிசாமி

அந்நாளில் திருவள்ளுவர் வகுத்த திராவிடக்கொள்கைகளை வெளிப்படையாக அழகுற எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். இதோ திராவிடர் பண்பாடு என்று வீரமுடன் எடுத்துக்காட்டும் அருமையான புத்தகம்.

தேய்ந்த விரல் 0—4—0

திருக்குறள் முனிசாமி

காதலியின் உள்ளத்தில் எத்தனை இரகசியங்கள் உள்ளன என்று வியந்து, கண்டறியாதன கண்டேன் என்று, படிக்கும் வாசகர்கள் ஒவ்வொருவரும் பேரின்பம் அடைகின்ற காதல் நூல்

வடலூரும் ஈரோடும் 0—4—0

திருக்குறள் முனிசாமி

சமய வாதியான வடலூர் இராமலிங்க அடிகள் சமயத்தை வெறுத்து எவ்வாறு ஈரோட்டுப் பெரியாரின் கொள்கைகளை அப்படி அப்படியே பல ஆண்டுகளுக்கு முன் கூறியிருக்கிறார் என்பதை விளக்கும் ஆராய்ச்சி நூல்

வள்ளுவரும் பெரியாரும் 0—8—0

திருக்குறள் முனிசாமி

பெரியாரின் அழகிய திருவுருவுடன் வெளிவந்திருக்கும் இந்நூலில், வள்ளுவர் வகுத்த தமிழ் நெறி, பெரியார் வாழ்வில் அமைந்திருப்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். வேகமான நடை. சிந்தனையைக் கிளறும் கருத்துக்கள். படித்து முடித்ததும் பெரியார்தான் இன்றைய வள்ளுவர் என்ற எண்ணம் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருக்கும்.

ஈரோட்டுத் தாத்தா 0—4—0

நாரா. நாச்சியப்பன்

நெஞ்சை யள்ளும் இன்பத் தமிழில் பெரியாரின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கவிதையாக்கித் தந்துள்ளார் தோழர் நாச்சியப்பன். வெறும் வரலாறாய் இல்லாமல் ஆங்காங்கே கற்பனை வளமும் அணிச்சிறப்பும் நூலை அழகு செய்கின்றன. பெரியாரைப் பாடும் முதல் கவிதை நூல் இதுதான்!

கோயில் பெருச்சாளிகள் 0—6—0

தில்லை வில்லாளன்

கோவிலிலே, காவற்காரன் முதல் காசு வாங்கும் பார்ப்பான் வரை, ஒவ்வொரு பெருச்சாளியும் செய்கின்ற ஆபாச லீலைகளைத் தனக்கென அமைந்த விறுவிறுப்பான தமிழில் அப்பட்டமாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

செந்தமிழ்ப் பதிப்பகம்

தபாற்பெட்டி 10 — புதுக்கோட்டை.